Registered as a NewsPaper in Ceylon
விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 72
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் சித்திரை 11 ஸபர் 17 வெள்ளிக்கிழமை [24-4-70]

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம்
— ரூ. 4-00
ஆறு மாதம்
— ரூ 7-50
ஒரு வருடம்
— ரூ 14-00
முற் பணம்
கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம்
அனுப்பப்படும்.

ஈழநாடு
சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம்
— ரூ 18-00
ஆறு மாதம்
— ரூ. 34-00
ஒரு வருடம்
ரூ. 66-00

# வெலிமடை: ஸ்ரீ லங்கா போட்டியின்றித் தெரிவு

கொழும்பு, வியாழன் வெலிமடை தொகுதியை சிறிலங்கா சுதந்திரக் கட்சி கைப்பற்றியுள்ளது.

வெளிமடைத் தொகுதியில் இன்று வேட்புமனு தாக்கல்செய்த சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளர் திரு. ஆர். எம். பண்டார போட்டியின்றி ஆட்சிமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டார்

இதன் காரணமாக தேர்தல் நடைபெறுவதற்கு ஒரு மாத அவகாசம் இருக்கும் அதே சமயம் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வெற்றி பட்டியலில் ஒரு. எம். பி. சேர்ந்துகொண்டார்.

இத்தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் வேட்புமனு தாக்கல்செய்த திரு. பேர்ஸிசமரவீராவின் வேட்புமனு சட்டரீதியான காரணங்களின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டது.

இதன்காரணமாக இம்முறை தேர்தலில் இலங்கை முழுவதிலுமே போட்டியின்றி வெற்றிபெற்ற பெருமை சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளருக்கு கிடைத்திருக்கின்றது.

## கே. எம். பி. தம்பதிகள் போட்டியில்லை

இம்முறை தேர்தலில் போடடியிடுவதில்லையென்று ஜாதிக விமுக்தி பெரமுனையின் தலைவர் திரு. கே. எம். பி. ராஜரத்தின திடீர் அறிவித்தல் ஒன்றைவிடுத்து எல்லோரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்துள்ளார்

தமது கட்சி ஐக்கியதேசியக் கட்சியை ஆதரிப்பதென்று முடிவு செய்திருப்பதால் தாமும் தமது துணைவியாரும் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை யென்று அவர் அறிவித்திருக்கிறார். என்றாலும் தமது கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் தமது சொந்த விருப்பத்தின் பேரில் சுயேட்சையாகப் போட்டியிடக்கூடும் என்று அவர் ஒப்புக்கொண்டார்.

## பக்கி வண்டியில் வந்தார்

கொழும்பின் பல்வேறு தொகுதிகளிலும் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வதற்காக வேட்பாளர்கள் ஆதரவாளர்களின் ஆதரவோடு ரெஜிஸ்ட்டார் ஜெனரல் அலுவலகத்திலும், கொழும்பு கச்சேரியிலும் அமைந்திருந்த வேட்புமனு ஏற்பதற்கான காரியாலயங்களுக்கு வந்து சேர்ந்தார்கள் இந்த இடங்களில் பலத்த பொலிஸ் பந்தோபஸ்து ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. கூட்டுமுன்னணி ஆதரவுபெற்ற சுயேச்சையாளர் திரு. ஹர்ஸ்விக்கிரமதுங்க பக்கி வண்டியில் வேட்புமனு தாக்கல்செய்வதற்கு வந்திருந்தர்.

கொழும்பு பிரதேசத்திலுள்ள 27 தொகுதிகளுக்கான வேட்புமனுக்கள் மேற்படி இரு காரியாலயங்களிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. வேட்புமனு தாக்கல் செய்யவந்தவர்களில் ஆறு அமைச்சர்களும் இருந்தனர் ஜே ஆர். ஜயவர்த்தன, பிரேமதாஸ, வி. ஏ சுகததாஸ முகம்மது, டி. எச். ஜயவர்தன பிலிப்குணவர்த்தன ஆகியவர்களும் திருமதி பண்டாரநாயக்காவும் வேட்புமனு தாக்கல் செய்தனர் (சி பி ஏ)

# வடக்கில் 11 தொகுதிகளிலும் 45 வேட்பாளர்கள் போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

**யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 11 தொகுதிகளுக்கான நியமனப்பத்திரங்கள் நேற்று யாழ்ப்பாண கச்சேரியில் தாக்கல் செய்யப்பட்டன. தமிழரக்கட்சியும் தமிழ்க்காங்கிரஸும் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 11 தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள தொகுதிகளில் ஐக்கிய தேசியக் கட்சி எவ்வரையும் நிறுத்தவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கோப்பாய் தொகுதியில் மட்டும் போட்டியிடுகிறது.**

வட்டுக்கோட்டையிலும், சாவகச்சேரியிலும் தமிழரசு தமிக்காங்கிரஸுக்கிடையில் நேரடிப் போட்டி நடைபெறுகிறது

உடுப்பிட்டித் தொகுதியில் கூட்டாட்சிக் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சியும், சமசமாஜக் கட்சியும் அபேடசகர்களை நிறுத்தியுள்ளன, கம்யூனிஸ்ட கடசி காங்கேசன்துறைத் தொகுதியிலும் அபேடசரை நிறுத்தியுள்ளது, சமசமாஜக் கடசி கிளிநொச்சி நல்லூர் உடுவில் தொகுதிகளில் போடடியிடுகிறது

இலங்கைத் திராவிட முன்னேற்றக்கழகம் பருத்தித்துறையில் மடடும் ஒருவரை நிறுத்தியுள்ளது. தமிழர் சுயாடசிக் கழகம் ஊர்காவற்றுறை நல்லூர். கோப்பாய், பருத்தித்துறை ஆகிய 4 தொகுதிகளில் போடடியிடுகிறது, ஈழத் தமிழர் விடுதலை முன்னணி காங்கேசன்துறையில் மடடும் போடடியிடுகிறது. யாழ்ப்பாண மாவடடத்தில் 11 தொகுதிகளிலும் 17 சுயேடசையாளர்கள் போடடியிடுகின்றனர். யாழ் மாவடடத்திலுள்ள 11 தொகுதிகளிலும் மொத்தம்45 அபேடசகர்கள் போடடியிடுகின்றனர்

**காங்கேசன்துறை**
இல: 76
எஸ். ஜே. வி. செல்வநாயகம்
ஏ றி துரையப்பா (சுயேச்சை)
ஸி எக்ஸ் மாட்டின் (தமிழரசு)
ந. நடராசா (தமிழ்க்காங்கிரஸ்)
பொ. கனகராசா (சுயேச்சை)
ஆ. விசாகரத்தினம்

**நல்லூர்**

(யூ என் பி)
ஜமால்டீன் (ஸ்ரீ ல சு க)
ஆர் ஜி சேனநேயக்கா (எஸ் எம் பி)

**மூதூர்**
இல 88 [இரட்டைதொகுதி]
எம் ஈ எச் முகமதலி (யு என் பி)
ஏ எல் ஏ மஜீத் (ஸ்ரீ ல சு க)
அ தங்கத்துரை (தமிழரசு)
எச் டி எல் லீலாரத்ன (சுயேச்சை)
சிரிசேன குருகே (சுயேச்சை)

**மட்டக்களப்பு**
இல: 90
[இரட்டை உறுப்பினர்]
எம் எஸ் ஏ ரஹ்மான் [சு க]
பி ஆர் செல்வநாயகம் [சுயே]
அரசரட்ணம் [சுயே]
சேவியர் [சுயே]
ஏ எச் மாக்கான் மார்க்கார் [யூ என் பி]
செ இராசதுரை [தமிழரசு]

**பட்டிருப்பு**
இல: 92

ஏலியஸ் ஜயமஹா (சுயேட்சை)
கே ஆரியதாச பெரேரா (சுயேட்சை)
வை மானம்பெரி (சுயே)
(4-ம் பக்கம் பார்க்க)

## ஊர்வலமாகச் சென்ற ஆதரவாளர்கள் கலைக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணத் தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிடும் திரு. அல்பிரட் துரையப்பாவின் ஊர்வலமொன்று நேற்று நண்பகல் பொலிஸாரால் பெரிய கடையில் தடுத்து நிறுத்தப்பட்டது. ஊர்வலத்தில் வந்த நூற்றுக்கணக்கான கார்கள், பொலிஸாரால் வேறு வழிக்குத் திருப்பி விடப்பட்டன. ஊர்வலத்தின் முற்பகுதியில் கொடிகளுடன், சுலோகங்கள் எழுப்பிய வண்ணம் சென்ற கச்சேரியில் நியமனப்பத்திரம் தாக்கல்செய்யப்பட்ட பின்னர் திரு. துரையப்பா தமது ஆதரவாளர்களுடன் பிரதானவீதி வழியாக ஊர்வலமாக வந்தபோது இச் சம்பவம் ஏற்பட்டது. ஏ. எஸ். பி. தலைமையில் வந்த பொலிஸ் கோஷ்டி ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்தியது. பொலிஸ் காரிலிருந்த இன்ஸ்பெக்டர் இராசையா ஊர்வலமாகச் செல்லவேண்டாமென்றும் கூட்டத்தைக் கலைந்து செல்லும்படியும், கூறினார். ஆஸ்பத்திரி வீதி பொலிஸார் ஊர்வலத்தைக் கலைத்தனர். ஊர்வலத்தில் கொண்டுசென்ற கொடிகளையும் அகற்றுமாறு பொலிஸார் தெரிவித்தனர்.

பெரியகடைச் சந்தியில் திரு. துரையப்பா சென்ற ஜீப் வண்டி மூன் பொலிஸ் கார் நிறுத்தப்பட்டு ஊர்வலமாகச் சென்ருல் கைது செய்வோமெனப் பொலிஸார் எச்சரித்தனர். இதை தொடர்ந்து திரு. துரையப்பா தமது ஆதரவாளர்களைக் காரியாலயத்திற்குள் செல்லுமாறு கேட்டுக்

## 1970 தேர்தலில்

மகாதேசாதிபதி கோபல்லவாவின் மகன் திரு. மொண்டி கோபல்லாவ லக்சல தொகுதியில் இடதுசாரி முன்னணியின் வேட்பாளராகப் போட்டியிடுகின்ருர்.

திரு. டட்லிசேனநாயகாவைச் சென்ற பொதுத்தேர்தலில் எதிர்த்து நேரடிப் போட்டியில் 14,558 வாக்குகள் பெற்று 3429 வாக்குகளால் தோல்வியுற்ற திரு. ரத்னபிரிய சேனநாயகா இந்த முறை திரு. சி.பி.டி. சில்வாவைஎதிர்த்துமின்னேரியாத் தொகுதியில்போட்டியிடுகிருர்.

சென்ற பொதுத் தேர்தலைவிட இந்தப் பொதுத் தேர்தலில் அதிகமான பெண்கள் பங்குபற்றியுள்ளனர்.

இலங்கைத் தேசிய தொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டியிடுகின்றனா. யாழ் மாவட்டத்திலுள்ள 11 தொகுதிகளிலும் மொத்தம்45 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர்

### காங்கேசன்துறை
இல: 76
எஸ். ஜே. வி. செல்வநாயகம் (தமிழரசு)
ஸி. சுந்தரலிங்கம் (சுயேச்சை)
வ. பொன்னம்பலம் (கம்யூனிஸ்ட்)
ரி. திருநாவுக்கரசு (தமிழ்க்காங்கிரஸ்)

### ஊர்காவற்றுறை
இல: 75
வ. நவரத்தினம் (சுயேச்சை)
கே. பி. இரத்தினம் (தமிழரசு)
என். ரி. சிவஞானம் (த. க.)
பி. கதிரவேலு (சுயேச்சை)
எஸ். நடராசா (சுயேச்சை)

### உடுவில்
இல: 77
வி தர்மலிங்கம் (தமிழரசு)
என் சிவனேசன் (தமிழ்க்காங்கிரஸ்)
வி காராளசிங்கம் (ல ச ச க)
வி எம் முதலியார் சுயேச்சை)
கே விநோதன் (சுயேச்சை)

### வட்டுக்கோட்டை
இல: 75
ஏ. அமிர்தலிங்கம் (தமிழரசு)
ஏ தியாகராசா (தமிழ்க்காங்கிரஸ்)

### யாழ்ப்பாணம்
இல: 78
ஜி ஜி பொன்னம்பலம் (தமிழ்க்காங்கிரஸ்)
ஏ ரி துரையப்பா (சுயேச்சை)
ஸி எக்ஸ் மாட்டின் (தமிழரசு)

### நல்லூர்
இல: 79
ஸி அருளம்பலம் (தமிழ்க்காங்கிரஸ்)
ஈ எம் வி நாகநாதன் (தமிழரசு)
ஏ இரத்தினம் (சுயேச்சை)
வி சச்சிதானந்தன் (ல ச ச க)
ஸி தனபாலசிங்கம் (சுயேச்சை)
எஸ் ஸ்ரீனிவாசன் (சுயேச்சை)

### கோப்பாய்
இல: 80
எஸ். கதிரவேலுப்பிள்ளை (தமிழரசு)
ரி குணரத்தினம் (தமிழ்க்காங்கிரஸ்)
எஸ கனகசுந்தரம் (சுயேச்சை)
எம் துரைராசா (ஸ்ரீ ல சு க)

### உடுப்பிட்டி
இல. 81
மு. சிவசிதம்பரம் (தமிழ்க்காங்கிரஸ்)
கே. ஜெயக்கொடி (தமிழரசு)
க. பிள்ளையினர் (சுயேச்சை)
பொன். குமாரசாமி (கம்யூனிஸ்ட்)
ச. சுந்தரம் (சுயேச்சை)
ஆர். ஆர். தர்மரத்தினம் (ல. ச. ச. க.)

### பருத்தித்துறை
இல. 82
க. துரைரத்தினம் (தமிழரசு)
ந. நடராசா (தமிழ்க்காங்கிரஸ்)
பொ. கனகராசா (சுயேச்சை)
ஆ. விசாகரத்தினம் (சுயேச்சை)

### சாவகச்சேரி
இல. 83
வே. குமாரசாமி (தமிழ்க்காங்கிரஸ்)
வ. ந. நவரத்தினம் (தமிழரசு)

### கிளிநொச்சி
இல. 84
க. கனகரத்தினம் (ல. ச. ச. க)
வீ. ஆனந்தசங்கரி (தமிழ்க்காங்கிரஸ்)
மு. ஆலாலசுந்தரம் (தமிழரசு)
க, ஆ. ஜெரோம் (சுயேச்சை)
அ சிவசுந்தரம் (சுயேச்சை)

### வவுனியா
இல 86
எப் பத்மநாதன் (கம்)
ரி. சிவசிதம்பரம் (த கா)
எஸ் எம் கே சுபசிங்க (சுயேச்சை)
ஏ டி ஏ செனிவரத்ன (சுயேச்சை)
எம் எஸ் செல்லத்தம்பு (தமிழரசு)

### மன்னார்
இல 85
என் எம் அப்துல்காதர் (ஸ்ரீ ல சு க)
வி ஏ அழகக்கோன் (தமிழரசு)
எஸ் ஏ ரஹீம் (யூ என் பி)

### திருக்கோணமலை
இல 87
பி நேமிநாதன் (தமிழரசு)
வி ஆர் நவரட்னராஜா

சேவியர் [சுயே]
ஏ எச் மாக்கான் மார்க்கார் [யூ என் பி]
செ இராசதுரை [தமிழரசு

### பட்டிருப்பு
இல: 92
எஸ் எம் இராசமாணிக்கம் [தமிழரச]
எஸ் யூ தம்பிராஜா [யூ என் பி]

### கல்குடா
இல: 89
கே டபிள்யு வேதநாயகம் [யூ என் பி]
பி மாணிக்கவாசகர் [தமிழரசு]
கபூர் [சுயே]
சிவஞானம் [சுயே]
கப்பிரியல் [சுயே]

### நிந்தாவூர்
இல 94
எம் எம் முஸ்தபா [யூஎன்பி]
மொகமட் கபூர் ]சு க[
எம் ஐ எம் அப்துல்மஜீத் [சுயே]

### கல்முனை
இல 93
எம் சி அகமது [சு க]
ஏ உதுமான்லெப்பை [தமிழரசு]
ஏ எம் மன்சூர் [யூ என் பி]

### பொத்துவில்
இல 95
எம் ஏ அப்துல்மஜீத் [யூ என் பி]
என் தர்மலிங்கம் [சுயே]
எம் ஐ அப்துல்ஜபார் [சு க]

### நுவரேலியா
இல: 53
வில்லியம் பெர்ணண்டோ [யூஎன் பி]
சி வி வேலுப்பிள்ளை (சுயே)
திசநாயகா [சு க]

### எட்டியாந்தோட்டை
இல 135
டாக்டர் என் எம் பெரேரா [ல ச ச க]
ஜோர்ஜ் கொத்தலாவலை [யூ என் பி]

### டெடிகம
இல 130
டட்லி சேனநாயகா [யூ என் பி]
தர்மசிரி சேனநாயகா [சு க]

### அத்தனக்கல
இல 11
திருமதி சிறிமா பண்டாரநாயக்கா சு க)
ஜே ஆர் பி சூரிய பெருமா (யூ என் பி)
ஆர் ஏ டபிள்யூ ரட்ணசேகரா (சுயே)

### கொழும்பு தெற்கு
(இரட்டைத் தொகுதி)
இல 4
ஆர் விஜய இந்திரா (சுயேட்சை)
பெர்னட் சொய்ஸா (ல ச ச க)
ஜே ஆர் ஜயவர்த்தன (யூ என் பி)

வந்த நூற்றுக்கணக்கான கார்கள், பொலிஸாரால் வேறு வழிக்குத் திருப்பி விடப்பட்டன. ஊர்வலத்தின் முற்பகுதியில் கொடிகளுடன், சுலோகங்கள் எழுப்பிய வண்ணம் சென்ற ஆதரவாளர்களைப் பொலிஸார் கலைத்தபோது அவர்கள் நான்கு பக்கமும்சிதறி ஓடினார்கள். இதன் பின்னர் திரு. துரையப்பா சென்ற ஜீப் வண்டி மட்டும் செல்வதற்ப் பொலிஸார் அனுமதித்தனர்.

வலத்தைத் தடுத்து நிறுத்தியது. பொலிஸ் காரிலிருந்த இன்ஸ்பெக்டர் இராசையா ஊர்வலமாகச் செல்லவேண்டாமென்றும் கூட்டத்தைக் கலைந்து செல்லும்படியும், கூறினார். ஆஸ்பத்திரி வீதியில் ஜீப்பின் பின்னால் வந்த கார்கள் பொலிஸாரினால் நிறுத்தப்பட்டு வேறு வழியால் திருப்பி அனுப்பப்பட்டன. ஊர்வலம் பொலிஸ் தடையை மீறித் தொடர்ந்து சென்றபோது மூன்று ஜீப்புகளில் வந்த

வலமாகச் சென்றால் கைது செய்வோமெனப் பொலிஸார் எச்சரித்தனர். இதைத் தொடர்ந்து திரு. துரையப்பா தமது ஆதரவாளர்களைக் காரியாலயத்திற்குள் செல்லுமாறு கேட்டுக் கொண்டார். காங்கேசன் துறைவீதி வழியாகச் சென்றுகொண்டிருந்த ஜீப் வண்டி மின்சாரநிலைய வீதி வழியாகத் திசை திருப்பி விடப்பட்டது.

# சிவநேசனின் விளக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சண்டிலிப்பாயில் நேற்று முன்தினம் நடந்த பொது மேடை விவாதம் எப்படி நடந்தது. ஏன் அது குழப்பத்தில் முடிந்தது? இதில்கலந்து கொண்ட உடுவில் தொகுதி தமிழ்க்காங்கிரஸ் வேட்பாளர் திரு. என் சிவனேசன் பின்வருமாறு தமது விளக்கத்தைக் கூறுகிறார்:-

நானும் சமஷ்டிக்கட்சி அபேட்சகர் திரு. வி. தர்மலிங்கமும் கலந்துகொண்ட சண்டிலிப்பாய் பொதுமேடையில் என்ன நடந்தது என்பதுபற்றி வந்த முற்றும் தவறான செய்தியைக் கண்ணுற்று வருந்துகிறேன்.

இந்தப் பொதுமேடையை அமைத்தவர்கள் எங்கள் இருவரையும், எங்கள்கொள்கைகளைப் பற்றியே பேச வேண்டுமென தெளிவுபடுத்தியிருந்தனர். கைதட்டலோ மற்றவர்களைத் தாக்கிப் பேசவோ கூடாதென நிபந்தனையும் விதித்திருந்தனர். இதனை திரு தர்மலிங்கமும் நானும் ஏற்றுக்கொண்டோம்.

என்னை முதலில் பேசும்படி கேட்டுக்கொண்டனர் இதற்கு இணங்க, நான் தமிழ்க்காங்கிரஸ் கொள்கையை எனது பேச்சில் விளக்கினேன். நான் பேசும்போது யாரும் கைதட்டவில்லை. நான்ஒருவரைக் கூட தனிப்பட்ட முறையில் குறிப்பிட்டுப்பேச முற்படவில்லை. திரு. தர்மலிங்கத்தின் பெயரை ஒருதடவை கூட நான் உச்சரிக்கவில்லை.

என்னைத் தொடர்ந்து திரு தர்மலிங்கம் ஒன்றரை மணி நேரம் பேசினார். அவர் என்னைத் தனிப்பட்டமுறையில் தாக்கிப்பேசினார். அவரது ஆதரவாளர்கள் பலமாகக் கைதட்டினார்கள். உடனடியாக இதுபற்றி கூட்டத் தலைவருக்கு அறிவித்தேன். அதற்கு அவர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அவருடைய பேச்சுக்குப் பதில் சொல்லவேண்டிய நேரம் வந்ததும் கூட்டம் கூட்டியவர்கள் விதித்திருந்த கட்டுப்பாட்டு விதிகள் நிபந்தனைகளை திரு. தர்மலிங்கமும் அவரது ஆதரவாளர்களும் மீறிவிட்டார்களென்றும் என்னைப் பற்றித் தனிப்பட்ட முறையில் திரு. தர்மலிங்கம் குறிப்பிட்டுப் பேசியதற்கு நான் பதிலளிக்க வேண்டியது எனது கடமையென்றும் நான் சொன்னேன். என்னைப் பற்றித் தனிப்பட்டமுறையில் குறிப்பிட்டவைகளுக்கு நான் பதிலளிக்கத் தொடங்கியதும் ஒலிபெருக்கி நிறுத்தப்பட்டது. திரு. தர்மலிங்கத்தின் ஆதரவாளர்கள் மேடையை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். இதைத் திரு. தர்மலிங்கம் பார்த்துக் கொண்டிருந்தார் இதைத் தடுப்பதற்குப் பொலிசார் தலையிட முயன்றனராயினும் அவர்களுக்குத் தோல்வியே கிடைத்தது. இச்சமயத்தில் திரு. தர்மலிங்கம் தனது ஆதரவாளர்களைக் கட்டுப்பாடாக நடந்துகொள்ளும்படி வேண்டிக்கொள்ளாமல், கூட்டத் தலைவருடன் மேடையை விட்டு வெளியேறி நடந்தார் நான் மேடையில் சிறிது நேரம் தங்கிநின்றுவிட்டுப் பின்னர் கூட்டத்தை விட்டுச் சென்றேன்.

# அடித்துக் கொலை!

## நெடுந்தீவில் சம்பவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

நெடுந்தீவு ஐந்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த கணபதி சின்னத்தம்பி என்பவர் அடிகாயங்களுடன் இறந்து கிடக்கக்காணப்பட்டார். நேற்றுகாலையில் இதுபற்றிய யாழ்ப்பாணம் பொலிஸ் தலைமைக் காரியாலயத்திற்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து உதவிப் பொலிஸ் சுப்ரின்டென்ட் திரு. சில்வாவும் பொலிஸ் சார்ஜன்ட் கனகரத்தினமும் நேற்று நண்பகலில் நெடுந்தீவுக்குச் சென்று ஸ்தலத்தில் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

## இன்று

யாழ்ப்பாணம்

வெள்ளி வண்ணை வைதீஸ்வரன் ஆலயத்தில் சுக்கிரவாரமாகிய இன்று மாலை வித்துவான் க.கி.நடராஜன் மூல இலக்கியங்கள் என்ற தொடரில் கதாப்பிரசங்கம் செய்வார், மாலை 7-00 மணிவரை சுக்கிரவார அம்மன் உற்சவம் நடைபெறும், பின்னர் திரு-வி. நல்லையா திருநாவுக்கரசுநாயனார் தொடர்பில் பிரசங்கம் செய்வார்

# "ஈழநாடு"

## பாலைதீவு நிவாரணநிதி

இந்நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் 'பாலைதீவு விபத்து நிவாரணநிதி', 'ஈழநாடு' யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிறோம்.

நேற்றுவரை சேர்ந்த தொகை 10,667-07

(கட்டுவன் மயிலிட்டி தெற்கு வர்த்தலைவிளான்) பண்டிதர் வே. முத்துலிங்கமும், மகாஜனக்கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்களான நா. சண்முகலிங்கம் சு. பாலச்சந்திரன் ஆகிய மூவரும் சேர்த்து அனுப்பியது. 55-00

[ 4- பக்கம் பார்க்க [

யிடுகிறார்.

சென்ற பொதுத் தேர்தலைவிட இந்தப் பொதுத் தேர்தலில் அதிகமான பெண்கள் பங்குபற்றியுள்ளனர்.

இலங்கைத் தேசிய தொழிலாளர் சங்கத்தலைவர் திரு. வி கே வெள்ளையன் மஸ்கெலியாத் தொகுதியிலும், திரு சி. வீ. வேலுப்பிள்ளை நுவரேலியாத் தொகுதியிலும் போட்டியிடுகிறார்கள்

நுவரேலியாத் தொகுதியில் யூ என் பி நியமனம் மறுக்கப்பட்ட முன்னைநாள் எம் பி திரு. டொனால்ட் ரணவீர, மஸ்கெலியாத் தொகுதியில் சுயேட்சையாளராகப் போட்டியிடுகிறார்

சென்ற பொதுத்தேர்தலில், வடக்கு மாகாணத்தில் சாவகச்சேரியிலும் ஊர்காவற்றுறையிலும்தான் தமிழ் காங்கிரஸ்-தமிழரசு நேரடிப்போட்டி நடந்தது. இம்முறை சாவகச்சேரியிலும் வட்டுக்கோட்டையிலும் நேரடிப்போட்டி நடைபெறுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வடக்குமாகாணத்தில் முதல் முறையாக கோப்பாய்த் தொகுதியில் போட்டியிடுகிறது.

சென்றதேர்தலில் வடக்கு மாகாணத்தில் 11 தொகுதிகளில் 48 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இம்முறை 45 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனா.

உடுப்பிட்டித் தொகுதியில் இடதுசாரிக் கூட்டணியைச் சேர்ந்த மூன்று கட்சிகளில் இரண்டு கட்சிகளான கம்யூனிஸ்ட கட்சியும் சமசமாஜக் கட்சியும் ஒன்றையொன்று எதிர்த்துப் போட்டியிடுகின்றன

திரு ஆர் ஜி சேனநாயகா தம்பதெனியாவிலும் திருக்கோணமலையிலும் போட்டியிடுகிறார்

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒரேயொரு வேட்பாளர் பருத்தித்துறையில் போட்டியிடுகிறார்

1960-ம் ஆண்டுத் தேர்தலுக்குப் பிறகு, 1970-ம் ஆண்டுத் தேர்தலில்தான் நேரடிப் போட்டிகள் அதிகமாகியுள்ளன

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், சாவகச்சேரி வட்டுக்கோட்டை கிளிநொச்சி காங்கேசன்துறை ஆகிய தொகுதிகளைப் பொறுத்தமட்டில் மக்களின் கவனம் அதிகமாகத் திருப்பப்பட்டிருக்கிறது

தேர்தலில் தோற்றுப் போன வேட்பாளர்களும் புதிய தேர்தல் சட்டத்தின்படி தேர்தல்வழக்குகளின் தண்டிக்கப்படலாய்

# ஆதரவாளரின் அன்பில் சிக்குண்ட வேட்பாளர்கள்

## யாழ். கச்சேரி முன் கண்ட காட்சிகள்

( நமது நிருபர்கள் )

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் கச்சேரியில் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டபின்னர் முதன் முதலாக தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலமே வெளியில் வந்தார். அச்சமயம் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 11 தொகுதிகளிலிருந்து வந்த தமிழ்காங்கிரஸ் ஆதரவாளர்கள் அவரை சூழ்ந்து கொண்டு, தோளில் தூக்கி மாலைகள் சூட்டி அழைத்துச் சென்றனர். ஜனக்கூட்டத்தை சமாளிப்பதற்கு பொலிஸார் பெரும் சிரமப் பட்டனர். ஒரு சந்தர்ப்பத்தில் கட்டுங்கடங்காத ஆதரவாளர்களை கட்டுப்படுத்த பொலிஸார் பெரும் சிரமமெடுத்தார்கள் கச்சேரி சந்தியில் சுமார் 15 நிமிடம் வரை ஆதரவாளர்கள் திரு. பொன்னம்பலம் சென்று கொண்டிருந்த ஜீப்பை சூழ்ந்துகொண்டு ஆரவாரம் செய்தனர். கட்சித்தலைவர் என்றவகையில் பொலிஸார் அவரை சுற்றிவர நின்று கண்காணித்த வண்ணமிருந்தனர்.

இரண்டாவதாக தமிழரசுக்கட்சி சார்பில் யாழ்ப்பாணத்தில் போட்டியிடும் திரு. சி. எக்ஸ். மார்ட்டின் கச்சேரியிலிருந்து வெளியேறிய போது ஆதரவாளர்கள் அவரை சூழ்ந்துகொண்டு சுலோகங்கள் எழுப்பினர் திரு. மார்ட்டினுடன் அவரது பாரியாரும் வந்திருந்தார். திரு. மார்டடின்

4-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கக் கேள்விகள்
கட்டடங்கள் திணைக்களம்

என். 1607- யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் இரத்த வங்கிக் கட்டிடத்தைச் சத்திர வைத்திய அரங்காகத் திருத்தி அமைத்தற்கான கேள்விப் பத்திரங்கள் 1970-5-16-ந் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும் மேலதிக விபரங்கட்கு 1970-4-24-ந் திகதிய அரசாங்க வர்த்தமானப்பத்திரிகையைப் பார்க்கவும். GP 2606

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நவீன ஜெர்மன் எந்திர சாதனங்களால் தயாரிக்கப் பெற்ற ஒட்டகமார்க் செங்கற்கள் எம்மிடம் உண்டு. தொடர்புகொள்க. ரில்லர் ஒன்று உடனே விற்பனைக்குண்டு. ஐந்து ஆணி பூட்டிய பெர்குசன் டிராக்ரர் பெட்டி ஒன்றும் விற்பனைக்குண்டு. ஜனு செங்கல் ஓட்டுத் தொழிற்சாலை, கண்டாவளை. 2061

வில்லியர்ஸ் (Mark 12) பிறஸ்போட் நீர் இறைக்கும் யந்திரம் நல்ல நிலையில் உள்ளது. விபரங்களுக்கு சண்முகா ரேடேர்ஸ், அபனை தெல்லிப்பழை. 2110

நல்ல நிலையிலுள்ள E. Y. தொடர் இலக்கமுள்ள மொறிஸ்மைனர்கார் உடன் விற்பனைக்குண்டு. 24, 25-ம் திகதிகளில் காலை 8 மணி தொடக்கம் மாலை நாலு மணி வரை பார்வையிடலாம். எக்ஸைசஸ் கந்தோர், பீச்றோட், யாழ்ப்பாணம். 2063

### தேவை

தியேட்டர் ஒன்றிற்கு, உதவி மனேஜர் காஷியர், ஒரு புக்கிங்கிளாக் தேவை. பிணைப்பணம் உதவி மனேஜர் 2000/- காஷியர் 2000/- புக்கிங்கிளாக் 1500/-. 30-4-70க்கு முன் விண்ணப்பிக்கவும். ஆ. தணிகாசலம், ஆத்தியடி, பருத்தித்துறை. 2062

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி
நம்பியார் - தங்கவேலு
நடித்த
ஹரிச்சந்திரா

# சண்டிலிப்பாய் பொதுமேடைக் கூட்டம்

# குழப்பத்தில் முடியக் காரணம் யார்?

## நிபந்தனைகள் பின்பற்றப்படவில்லை

— பெரி. சுந்தரலிங்கம் —

''யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு''
''இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருக்கக் காய் கவர்ந்தற்று''
''சொல்லுக சொல்லை அச்சொல்லை
வெல்லும் சொல்லின்மை அறிந்து''

வள்ளுவப் பெருந்தகையின் இம்மூன்று குறள்களின் கருத்துச் சிறப்பும், அவற்றை நடைமுறை வாழ்வில் கடைப்பிடிக்கவேண்டிய அவசியமும், மற்றெல்லாக் காலத்தையும்விட தேர்தல் பிரச்சாரக்காலத்தில், உச்சநிலையை அடைந்து வருகின்றன என்றால் மிகையாகாது.

நேற்று சண்டிலிப்பாய் வடக்கு சனசமூக நிலையம் உடுவில் தொகுதியில் போட்டியிடும் தமிழ்க்காங்கிரஸ் வேட்பாளர் திரு. என். சிவனேசனுக்கும், தமிழரசுக் கட்சி வேட்பாளர் திரு. வி. தர்மலிங்கத்துக்கும் பொது மேடையொன்று அமைத்துக் கொடுத்து, ''தேர்தலில் ஏன் நான் நிற்கின்றேன்?'' என்ற தலைப்பில் பேச ஏற்பாடு செய்திருந்த பொதுக் கூட்டம் இறுதிக்கட்டத்தில் குழப்பத்தில் முடிவடைந்ததைக் கண்டபோதும் இந்த எண்ணம் தான் என்னகத்தே மேலோக்கி நின்றது.

அரசியல் சார்பற்ற ஏதாவதொரு ஸ்தாபனம் இந்த மூன்று முக்கிய குறள்களையும் அச்சிட்டு, விளக்கவுரையுடன் வேட்பாளர்கள், அவர்தம் பீரங்கிப் பேச்சாளர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கினாலும் பயன் ஏற்படலாம் என்றும் நினைக்கத் தோன்றுகிறது.

எனது மேதாவிலாசத்தைக்காட்ட இதை-இப்படி எழுதுவதாக யாரும் நினைத்துவிடக்கூடாது. அரசியற் கட்சிக்கூட்டங்களை பொதுமக்களில் ஒருவனாக, அவர்கள் மத்தியிலேயிருந்து கேட்டு, கண்டு, எழுதிப் பிழைப்பவன் என்ற ரீதியிலும் மேடையில் இருக்கும் 'மேதை'களின் குதர்க்கச் சொற்பொழிவுகளால் ஏற்படும் குழப்பத்தில் இறுதியில் 'வாங்கிக் கட்டிக் கொள்ளவேண்டிய' துர்ப்பாக்கிய நிலையில் இருப்பவர்களில் ஒருவன் என்ற நிலையிலும் தான் இதனை எழுத முனைந்தேன்.

நேற்று சண்டிலிப்பாய் கூட்டக் குழப்பத்தின் போதும், மேடையை நோக்கி ஓடிச்சென்றவர்களை திருப்பி விரட்ட சில சூரப்புலி கான்ஸ்டபிள்கள் ''அடேய்... அடேய்... போடா, போடா...'' என்று சிங்கள மணம் கமழும் தமிழில் ஏசிக்கொண்டே குண்டாந்தடிகளைச் சுழற்றியபோது, எனது தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்தான்!

### குழப்பத்திற்கு காரணம் என்ன?

சரி, இனி கூட்டம் குழம்பியதற்கு காரணத்தைப் பார்ப்போம். தேர்தலில் போட்டியிடும் இரு கட்சிகளின் வேட்பாளர்களை ஒரே மேடையில் அழைத்துப் பேசச்சொல்வது நெருப்போடு விளையாடுவது போலத்தான்.

மேடையில் பேச்சாளர்களையும் தலைவர்களையும் தவிர யாரும் இருக்கக் கூடாது; மேடைக்கு ஐம்பது யாருக்கருகில் யாரும் வரக்கூடாது; தனிப்பட்டவர்களையோ, கட்சிகளையோ நேரடியாகத்தாக்கக்கூடாது; சபையோர் கைதட்டவோ, கேள்வி கேட்கவோ, ஆரவாரம் செய்யவோ கூடாது; பேச்சாளர்கள் குறிப்பிட்ட நேரத்துக்குள்ளாக, குறிப்பிட்ட தலைப்பைப் பற்றித்தான் பேசவேண்டும்- இவை போன்ற பல கட்டுப்பாடுகளை இம்மியளவும் வழுவாது கடைப்பிடித்தால் பொதுமேடைக்கூட்டங்களை வெற்றிகரமாக, அமைதி எதிர்த்தும் வாய்விட்டே பேசியதையும் கேட்கக்கூடியதாகவிருந்தது; சபையோர் கைதட்டக்கூடாது ஆரவாரம் செய்யக்கூடாது என்ற விதியை கூட்டத்திற்குத் தலைமை வகித்தவரோ, பொலிசாரோ ஆரம்பத்திலேயே தீவிரமாக அமுல் நடத்த முயற்சிக்கவில்லை; எல்லாவற்றிக்கும் மகுடமிட்டாற்போல, பேச்சாளர்கள் தனிப்பட்ட தாக்குதல்களில் ஈடுபடுவதைத் தடுக்கவில்லை-கூட்டம் குழம்பியதற்கு இவைதான் மூலகாரணங்கள்.

தலைப்பு, 'தேர்தலில் ஏன் நான் நிற்கிறேன்?'

7-30 மணிக்குக் கூட்டம் ஆரம்பமானது. முதலில் பேசினார் தமிழ்க்காங்கிரஸ் வேட்பாளர் திரு. என். சிவநேசன். இவர் ஒரு பி எஸ் ஸி எம். எஸ், ஸி; பொளாதாரப் பட்டதாரி. புருணை என்ற அந்நிய நாட்டில் வேலைபார்த்தவர். முன்பு தமிழரசுக் கட்சியில் இருந்தவர், சென்ற முறை இதே தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்டு 5,577 வாக்குகள் பெற்றுப் போட்டியில் மூன்றுவதாக வந்தவர்.

'போராடியோ வலோற்காரமாகவோ, சத்தியாகிரகம் செய்தோ பெறும் உரிமைகளும், அதனால் ஏற்படும் ஒற்றுமையும் தற்காலிகமானவை; போலியானவை என்பதைச் சரித்திரம் காட்டுகிறது' எனவும், சிங்கள மக்களுடன் ஒத்துழைத்து, அவர்கள் ஆதரவைப்பெற்று வழ்ந்தால்தான் நாட்டில் நிரந்தரமான ஒற்றுமையும் அமைதியும் ஏற்படும்' என்றும், தனது பேச்சை ஆரம்பித்தார் திரு சிவனேசன்

7-30 மணியிலிருந்து 8-37 வரை பேசிய திரு. சிவநேசன் தனது பேச்சில் முக்கிய விஷயங்களைக் குறிப்பிட்டார். ஒன்று யாழ்ப்பாணத்தில் சர்வகலாசாலை, இரண்டு மாவட்டசபை, மூன்று தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம், நான்கு அமைப்பை சமஷ்டிக்கட்சியினர் திட்டவட்டமாம ஏற்றுக்கொண்டே கையெழுத்திட்டதாகவும், அதைத் தானும் போயிருந்த மட்டக்களப்புத் தமிழரசு மாநாட்டில் வன்னியசிங்கம் வாசித்துக் காட்டியதாகவும் கூறினார் சிவனேசன்.

சந்திர மண்டலத்துக்கு போகிற 'ரொக்கட்' உயரே போகப்போக ஒவ்வொரு பகுதி பாகம் கழண்டு விழுவதைப் போலத்தான் தமிழரசுக் கட்சியின் சமஷ்டிக் கொள்கையும், நாளாவட்டத்தில்குறைந்துகொண்டே போவதாகக் கேலி செய்தார்.

### தமிழ்ப் பகுதிகளில் குடியேற்றம்

தமிழ்ப்பகுதியில், குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றத்தைத்தடுத்து நிறுத்தும் கடமையும், பொறுப்பும் அந்தப் பகுதியில் திருக்கோணமலையில், மட்டக்களப்பில், பிரதிநிதிகளாக உள்ள தமிழரசுக் கட்சிக்காரர்களுக்குத்தான் என்றார் சிவனேசன்.

கல்லோயாப் பகுதிகளில் சிங்களவர்களே அதிகமாகக் குடியேற்றப்பட்டு, அப்பகுதிகள் சிங்களப் பகுதிகளாக மாற்றம் பெற்று விட்டன என்பதற்கு சிவனேசனின் பதில்: கல்லோயாவுக்கு கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளதே, அதெல்லாம் தமிழ் மக்களின் காசா? சிங்கள மக்களின், முஸ்லிம்களின், இலங்கையரின் காசு. இந்தக் குடியேற்றத் திட்டங்களில் தமிழ் மக்கள் குடியேற விரும்பவில்லை. அது தான் சத்தியமான உண்மை.

இப்போது குடியேற விரும்பலாம்; அன்றைய நிலையில் தமிழர்கள் விரும்பவில்லை கோடிக்கணக்கான காசு செலவழித்துவிட்டு சும்மா இருக்கலாமா? சிங்களவர்களைக் குடியேற்றுவது பிழைதான்; ஆனால் அதற்குப் பரிகாரம் எங்களை வட தமிழரசுக்கட்சியார் ஏன் எதிர்த்தார்கள் தெரியுமா? ஒரேயொரு காரணம்தான், ஒரேயொரு மனிதனுடைய பேராசைதான். டி. எஸ். சேனநாயகா செல்வநாயகத்தை அமைச்சராக நியமிக்காததுதான் காரணம்.

தர்மலிங்கம்: (குறுக்கிட்டு) பொய், பொய்!

சிவனேசன்: புளியங்கூடலில் நவரத்தினம் கேட்டாரே கேள்விகள். 5,25,000 பேரை நாடு கடத்த ஏன் கை உயர்த்தினீர்கள்? இதற்குப் பதிலளிக்க வேண்டும். பதிலளிக்கவேண்டும் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பம் செய்ய வேண்டாமென்று 18 மாதம் எதிர்த்துவிட்டு, கடைசி 6 மாதங்களில் அவசரம் அவசரமாக விண்ணப்பங்கள் அனுப்பியதுதான் பிழை.

இப்படித் தமிழில் பேசிக்கொண்டிருந்தவர் 'இட்ஈஸ் எ ஷேம்... என்று ஆரம்பித்து சில நிமிடங்கள் ஆங்கிலத்தில் பொழிந்து தள்ளிவிட்டார். இதற்கு முன்னும் இடைக்கிடை, ஆங்கிலத்தில் சில நிமிடங்கள் பேசித் தள்ளினார் சிவனேசன்.

### தர்மலிங்கம் ஆரம்பித்தார்

''நான் இந்தப்பொது மேடையைக் சவாலாகவோ போட்டியாகவோ ஏற்கவில்லை, நானும் நண்பர் சிவனேசனும் எங்கள் கொள்கைகளை விளக்கும் வாய்ப்பாகவே கருதுகிறேன் என்று இரவு 8-38க்கு ஆரம்பித்தார் வி. தர்மலிங்கம் திரு தர்மலிங்கம் சட்டக்கல்லூரியில் அனுமதி பெற்று வழக்கறிஞராகுவதற்கான மூன்று சோதனைகளில் முதலிரண்டு சோதனைகளில் தேறி, அவரேசொன்னபடி அவரது முதலாவது மனைவி இறந்ததினாலும் வேறு பல தனிப்பட்ட காரணங்களினாலும் மூன்றுவது சோதனையைப் பாஸ்செய்யாமல் விட்டவர். இதை வாசகர்கள் தெரிந்து வைத்துக்கொண்டால் திரு. சிவநேசனின் பேச்சுக்கும் வரப்படுமென்று கூறப்பட்டிருந்தபோது சிம்மாசனப் பிரசங்கங்களை ஏன் எதிர்க்கவில்லை என்று கேட்கிறேன்.

''யாழ்ப்பாணத்தில் படிப்பவர்களுக்கு மட்டுமல்ல நாங்கள் பல்கலைககழகம் கோருகிறோம். இலங்கையின் எல்லாப்பாகங்களிலுமுள்ள தமிழர்களுக்காகத்தான் கேட்கிறோம். எனவே யாழ்ப்பாணத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்கு போவோரின் எண்ணிக்கையைப்பற்றி பிரச்னை இல்லை.''

''உடுவிலில்தான் பல்கலைக்கழகம் அமைக்கப்படுமென நண்பன் சிவநேசன் சொன்னார். அப்படியானால் இராமநாதன் கல்லூரியை மூடி விட்டுத்தான் ஆரம்பிக்க வேண்டும், அப்படிச்செய்ய ஒருபோதும் விடமுடியாது. அத்தோடு பொன்னம்பலம் இராமநாதன் விட்டுச்சென்றுள்ள சொத்துகள் சைவப் பிள்ளைகளுக்கு, சைவமுறைப்படி கல்வி கற்பிக்கத்தான் பயன்படுத்தமுடியும். அப்படித்தான் எழுதிவைககப் பட்டுள்ளது. ஆகவே அந்தச் சொந்துக்களை சைவ சர்வகலாசாலைக்குத்தான் பயன்படுத்தமுடியும்; இதுதானா நமக்குவேண்டும்?''

### மாவட்டசபை

அடுத்து மாவட்டசபைகளைப் பற்றிப் பேசினார் தர்மலிங்கம். ஒற்றையாட்சியைஏற்றுத்தான் பண்டாரநாயக்கா — செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது என்று மட்டக்களப்பு மகாநாடடில் வன்னியசிங்கம் வாசித்துககாடடியதாகச் சொன்ன கூற்றை ஆதாரத்தோடு மறுத்தார் தர்மலிங்கம்,

பண்டா—செல்வா ஒப்பந்தத்தின் புகைப்படப் பிரதியைத் தனது பைல்கட்டிலிருந்து எடுத்து, அதிலிருந்து 'எந்த அடிப்படை உரிமைகளையும், கொளகைகளையும் விட்டுக்கொடுககாமல் ஏதாவது தற்காலிக சமாதானம் காண முயற்சித்தோம்'' என்று ... தொகுதிக்கு வேட்பாளனாக நிறுத்தியிருப்பதால் தான்'' என்று ஆரம்பித்து பேசினார் தர்மலிங்கம்.

''1958-ல் நடந்த ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தில் நான கலந்துகொண்டேன். மேடையிலிருப்பவர்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை என்றுதான் நினைக்கிறேன் என்று சாடையாகச் சாடியபோது, சிவனேசன் குறுக்கிட்டு, ''நானும் என் மனைவியும் அப்போராட்டத்தில் கலந்து கொண்டோம்'' என்று பதிலளிகக 'அப்படியானால் மன்னிக்கவும்' என்று தர்மலிங்கம்சொல்ல, கூட்டத்தில் ஒரு பகுதியினர், இந்த முறை சிவனேசனின் ஆதரவாளர்கள், கட்டுப்பாட்டை மீறிக் கரகோஷம்செய்தனர் சிலர் விசில் அடித்தனர்.

தர்மலிங்கம் தொடர்ந்தார்: 'நான் தேர்தலில் நிற்பதற்காகத்தான் தமிழரசுக் கட்சியில் சேர்ந்ததாகச் சிலர் சொல்கிறார்கள். நான் தேர்தலில் நிற்பதற்குமுன்னரே தமிழரசுக் கட்சிக்குச் சேவை செய்திருக்கிறேன்: அதனால் தான் கட்சி என் மீது நம்பிக்கைவைத்து இந்தத் தொகுதியில் நிறுத்தியிருக்கிறது.

'இந்தத் தொகுதி மக்கள் என்மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள், என்னை முன்பு எதிர்த்தவர்கள் கூட இந்த முறை என்னை ஆதரிக்கிறார்கள், அதனால்தான் நான் தேர்தலில் நிற்கிறேன்' என்று சொல்லி, எரிகிற தீயிலே எண்ணெய் வார்ப்பதுபோல நண்பன் சிவநேசனின் பிரதம ஏஜண்டாக இருந்தவரும், பொதுமேடைகளில் அவருக்காகப் பேசியவருமான (ஒருவரின் பெயரைச் சொல்லி) அவர் கூட என்னை ஆதரிக்கிறார் என்று அந்த நபர் எழுதிய கடிதம் ஒன்றை பகிரங்கமாக மேடையில் வாசித்தார். (சட்ட காரணங்களுக்காக இந்தப் பெயரும், அதற்கப்புறம் மேடையில் அடிபட்ட பெயர்களும் இங்கே நீக்கப்பட்டுள்ளன.

'நான் ஒருவேளை பொருளாதாரத்தைச் சோதனைகளுக்காகப் புத்தகங்களிலிருந்துபடிக்காமலிருக்கலாம். ஆனால் நேரடி அனுபவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடித்த

# ஹரிச்சந்திரா

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, கே ஆர் விஜயா
நாகேஷ்-பாலாஜி-பேபி ராணி
நடித்த

# திருடன்

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன் — பாரதி
மற்றும் பலர் நடித்த

# தங்கச் சுரங்கம்

(முழுநீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)

வெற்றிமுரசுகொட்டும்
103வது தினம்
கெப்பிட்டல்
(கொழும்பு)
மகத்தான 72-வது தினம்
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
(போயா, பிரிப்போயா காலை 10-30)
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்



சிவாஜிகணேசன் - பத்மினி
பாலையா, நாகேஷ், நம்பியார்
மற்றுபலர் நடித்த

# தில்லானு மோகனும்பாள்

26-ந் திகதி ஞாயிறு முதல்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
திரைகளில்
சினிமா ரசிகர்கள் வெகு ஆவலுடன்
எதிர்பார்த்திருந்த மற்றுமோர்
வெற்றிச் சித்திரம்
புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.
நடித்த

# நம் நாடு

தலைப்பைப் பற்றித்தான் பேசவேண்டும்- இவை போன்ற பல கட்டுப்பாடுகளை இம்மியளவும் வழுவாது கடைப்பிடித்தால் பொதுமேடைக்கூட்டங்களை வெற்றிகரமாக, அமைதியாக, நடத்தி முடிகக முடியும்.

உண்மையில் புளியங்கூடலில், தமிழரசுக்கட்சிப்பொதுச் செயலாளர் அமிர்தலிங்கத்துக்கும், சுயாட்சிக்கழகத்தலைவர் திரு.வி.நவரத்தினத்திற்கும் இடையில் அடையாளஅட்டைச்சட்டம், இலங்கை-இந்தியஒப்பந்தஅமுல் சட்டம் பற்றி விவாதிக்க அமைக்கப்பட்ட பொதுமேடைக்கூட்டம் வெற்றிகரமாக நடந்தது என்ருல், இந்தக் கட்டுப்பாடுகள் கண்ணியமாக அனுசரிக்கப்பட்டன; அவற்றை அமுல் நடத்துவதில் பொலிசார் தீவிரமாக நின்றனர்.

சண்டிலிப்பாயில்பொலிஸ் ஒழுங்குகளும் திருப்திகரமாக இல்லை; கூட்டத்தை ஒழுங்கு செய்த சண்டிலிப்பாய் வடக்கு சனசமூக நிலையத் தொண்டர்கள் கூட, ஒருபக்கச் சார்புடன் ஒரு வேட்பாளரை ஆதரித்தும், இன்னொரு வேட்பாளரை

இன்று மட்டும்
வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30,10-00
பிரிபோயா,போயா 2-30மணி
ரவிச்சந்திரன் - ராஜஸ்ரீ
நடித்த
நீயும் நானும்

இன்று மட்டும்
ஸ்ரீ காலிங்கம்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30
ஆனந்தன் - நம்பியார்
நடித்த
நீயா நானு?

REGAL JAFFNA
Daily 10-30, a.m.
4-45, 7 & 9-45 p.m.
Anthony Quinn,
Anjanette Comer
in
GUNS FOR SAN SEBASTIAN
ஒவ்வொரு கத்தோலிக்க
மக்களும் கட்டாயம்
பார்க்க வேண்டிய படம்

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
Prepoya, Poya 4 shows
THEY CAME TO
ROBLASVEGAS
(colour)

சன் தனது பேச்சில் முக்கிய விஷங்களைக் குறிப்பிட்டார். ஒன்று யாழ்ப்பாணத்தில் சர்வகலாசாலை, இரண்டு மாவட்டசபை, மூன்று தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம், நான்கு இலங்கை-இந்தியர் பிரச்னை. ஐந்து மகாவலிகங்கைத் திட்டம்.

அரசியல் ரீதியில் தமிழரசுக் கட்சியைத்தவிர மற்ற எல்லாஅரசியற் கட்சிகளும் ஆராய்ச்சி ரீதியாக, நீடாம் கமிஷன் குணவர்த்ஞ குழு போன்றவை, தமிழ்ப்பெரியார்களான சுவாமி விபுலானந்தர், சேர் பொன்னம்பலம் இராமநாதன் போன்ருேரும் யாழ்ப்பாணத்தில் தான் பல்கலைக்கழகம் நிறுவவேண்டுமென ஏற்றுக்கொண்டுள்ளனர் என்று சொன்ன சிவநேசன், 'திருகோணமலை சுவாத்தியம் சரியில்லை; அங்கே 45 சதவிகிதத்தினர் சிங்களவர் வாழ்கின்ருர்கள். திருகோணமலை தமிழ்ப் பிரதேசத்தின் மத்திய கேந்திரமாவது எப்படியென்ருே அங்கேபல்கலைக்கழகம் நிறுவினுல் தமிழ் மக்களை ஒற்றுமைப்படுத்துவது எப்படியென்ருே தன் சிற்றறிவுககு எட்டவில்லை' என முடித்தார்.

'யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் என்ருல், உடுவில் தொகுதியில்தான் பல்கலைக்கழகம் நிறுவப்படும்; எனவே யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் வேண்டாமென்று சொல்வதன் மூலம் உடுவில் தொகுதியில் பல்கலைக்கழகம் வேண்டாம் என்றுசொல்பவர்கள் என்ன உரிமையோடு, பண்போடு வாக்குக் கேட் கவருகிருர்கள்?' என்று கேட்டார் சிவநேசன்.

## மாவட்டசபை

இரண்டாவதாக மாவட்டசபைக்கு வந்த திரு.சிவநேசன், தமிழரசு, சமஷ்டி என்று சந்தர்ப்பத்துக்கு ஏற்றுற்போல மாறிக்கொள்கின்றனர் எனவும், தமிழரசு தமிழரசு என்று சிறுபான்மையினரான தமிழர்கள் கேட்கும் போது சிங்கள அரசு, சிங்களஅரசு என்று திரு. ஹேமா பஸநாயக்கா போன்றசிங்களவர்கள் கேட்பது ஒன்றும் வகுப்புவாதம் இல்லையெனவும் வாதிட்டார்

தமிழரசு, சமஷ்டி, பிராந்தியசபை, மாவட்டசபை என்று படிப்படியாகத் தங்கள் தங்கள் கோரிக்கைகளைக் குறைத்துக் கொண்டு வந்துவிட்ட தமிழரசுக்கட்சியினர் அடுத்து கிராமசபைகளைத் தான் கேட்பார்கள் என்று கிண்டல் செய்தார்.

பண்டாரநாயகா - செல்வநாயகம் ஒப்பந்தத்தில் ஒற்றையாட்சி அரசியல்யில் தமிழர்கள் விரும்பவில்லை கோடிக்கணக்கான காசு செலவழித்துவிட்டு சும்மாஇருக்கலாமா? சிங்களவர்களைக் குடியேற்றுவது பிழைதான்; ஆனுல் அதற்குப் பரிகாரம் எங்களை வடக்கு மாகாணத்தில் திட்டுவலல்ல மேலும், மேலும், தமிழ் மக்களை அப் பகுதியில் குடியேற்ற முயற்சிப்பது தான்.

## மகாவலிகங்கை திசைதிருப்புத் திட்டம்

மகாவலிக்கங்கை திசைதிருப்புத் திட்டம், இந்த நாட்டில் வேலையில்லாப் பிரச்னையையும், உணவுப் பிரச்னையையும் தீர்க்கும் மகத்தான திட்டம் என்று சொன்ன திரு.சிவனேசன் அதுபற்றிக் கூறியதாவது:

'ஐ.நா.போன்ற உலகநிறுவனங்களைச் சேர்ந்த பெரிய படித்த நிபுணர்கள் எல்லாம் மகாவலித் திட்டத்தைப் பாராட்டுகின்ருர்கள். ஆனுல் இங்கே எல்லாரும் நிபுணர்களாக இருக்கிருர்கள் படியாதவர்களும் நிபுணர்களாக இருக்கிருர்கள். படியாத நிபுணர்கள் மகாவலித் திட்டம் கூடாது என்று எதிர்க்கிருர்கள்.

'வடக்கு மாகாணத்திற்கு மகாவலிக்கங்கை திசை திருப்பப்பட்டால், திருகோணமலை, பொலன்னறுவை போன்ற இடங்களுக்குத் தண்ணீர் இல்லாமற் போய்விடும் என்று சொல்வது வேடிக்கையான விஷயம். தினம், தினம், கோடிக்கணக்கான எவ்வளவு தொன் தண்ணீர் வீணுகக் கடலில் போய் விழுவது அரைப்படிப்பு நிபுணர்களுக்குத் தெரியுமா?

## இலங்கை இந்தியர் பிரச்னையில் காங்கிரஸ்

'தமிழ்க் காங்கிரஸும், ஜி ஜி. பொன்னம்பலமும் தான் இந்திய வம்சாவழியினர் நாடற்ருேராகவும், வாக்குரிமை யற்ருேராகவும் ஆகக் காரணமானவர்கள் என்று சொல்வது கடவுளுக்கு ஒத்துக் கொள்ளுமா? இது நியாயமா? 1948ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கொண்டுவரப்பட்ட சட்டத்தை திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், செல்வநாயகம் உட்பட அன்றிருந்த எல்லாரும் எதிர்த்ததை யாரும் மறுக்கமுடியாது.

1949-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டத்தைதான் நாங்கள் ஆதரித்தோம். காரணம் என்ன? இந்தச் சட்டத்தால் 4 லட்சம் பேருக்குப் பிரஜாவுரிமை கிடைக்க வழி இருந்தது. இல்லாதவர்களுக்கு உரிமை கொடுப்பதை எதிர்ப்பது நியாயமா? நூற்றுக்கு நூறு சரி.

...படியாலும் வேறு பல தனிப்பட்ட காரணங்களினுலும் மூன்ருவது சோதனையைப் பாஸ்செய்யாமல் விட்டவர். இதை வாசகர்கள் தெரிந்து வைத்துக்கொண்டால் திரு. சிவநேசனின் பேச்சுக்கும், திரு. தர்மலிங்கத்தின் பதிலுக்கும், அதன்பின் ஏற்பட்ட குழப்பங்களுக்கும் பின்னணியை விளங்கிக் கொள்ள உதவும்.

பல்கலைக்கழகம் விஷயம் பற்றி திரு. தர்மலிங்கம் சொன்னகாவது: "1956ல் தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்ட போது நாட்டிலுள்ள பலதுறைப்பட்ட மேதைகள்-என்னைப் போல அரைப் படிப்புப் படித்தவர்கள் அல்ல. என்னிலும் அதிகமாகப் படித்தவர்கள், முதலியார் முத்துத்தம்பி, செனட்டர் கனகநாயகம், போன்ற பெரியார்கள் கூடித் திருமலையில் பல்கலைக்கழகம் நிறுவத் தீர்மானித்தார்கள். ஒருவேளை வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள், தமிழர் ஒற்றுமை பற்றித் தெரியாத வெள்ளைக்காரர்கள் வேண்டுமானுல் யாழ்ப்பாணத்தில் வேண்டுமெனச் சிபார்சு செய்திருக்கலாம்.

"சர்வகலாசாலை வெறும் கல்விக் கட்டடமாக இருக்கக்கூடாது. தேசிய இனத்தை வளர்க்கின்ற ஒரு கருவியாக இருக்கவேண்டும்.

1948ல் மலைநாட்டுத் தமிழர்கள் இலங்கைத் தமிழர்களின் மீதான நம்பிக்கையை இழந்தனர். அதேபோல இப்பொழுது பல்கலைக்கழகம். யாழ்ப்பாணத்தில் தான் அமையவேண்டுமென்ருல் கிழக்கு மாகாண மக்களின் நம்பிக்கையையும் இழக்கவேண்டி ஏற்படும்.

## ஏன் எதிர்க்கவில்லை?

தமிழ்க் காங்கிரஸ் 1965 தேர்தல் விஞ்ஞாபனத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைப் பற்றியோ இந்துப் பல்கலைக்கழகத்தைப் பற்றியோ இராமநாதன் பல்கலைக்கழகத்தைப் பற்றியோ ஒரு வார்த்தையும் இல்லை நண்பருக்கு-சிவநேசனுக்குத் தெரியாவிட்டால் என்னுடைய பையில் இருக்கிறது. எடுத்துப் பார்க்கலாம்.

தமிழரசுக்கட்சி இராமநாதன் பல்கலைக்கழகத்திற்கான 10ரூபா மான்யத்தை ஆதரித்து வாக்களித்தது ஏன் என்று கேட்கிருர்கள். அடையாள மான்யத்தில் விபரம் ஒன்றுமில்லை. இப்படிக் கேட்கின்றவர்கள், 1965, 66, 67ம் ஆண்டுகளுக்கான சிம்மாசனப்பிரசங்கங்களில் மாவட்டசபைகள் மசோதா கொண்டு

...யைத் தனது பைலிகட்டிலிருந்து எடுத்து, அதிலிருந்து 'எந்த அடிப்படை உரிமைகளையும், கொள்கைகளையும் விட்டுக்கொடுககாமல் ஏதாவது தற்காலிக சமாதானம் காண முயற்சித்தோம்'' என்று பண்டாரநாயகாவே எழுதி ஒப்பமிட்டிருககிருர் என்று ஆங்கிலத்தில் அதனை வாசித்துக காட்டியபோது கூடடத்தில் ஒருபகுதியினர் கட்டுப்பாடடை மீறி கரகோஷம்செய்தனர்.

"ஒற்றையாடசியின் கீழ் தவககைககும் பாம்புககும் இடையிலான - தவககையைப் பாம்பு விழுங்கியவுடன் நிலவும் அமைதியும் ஒறறுமையும் நிலவும் என்ருர்.

தமிழரககடசி தேர்தல் விஞ்ஞாபனத்தில், கல்விவிஷயங்கள மாவடட ரீதியாக வேண்டுமென்று கேடடிருககும்போது, மற்ற அதிகாரங்களும் மாவடட ரீதியாக வேண்டுமென்று நாங்கள கேடபதில் தவறென்ன?

## குடியேற்றம்

கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றம் பற்றி திரு. தர்மலிங்கம் கூறியதாவது:-

"கல்லோயாத் திட்டத்தின் கீழ் 1956-ம் ஆண்டு நாங்கள் பெரும்பான்மையாக வருவதற்கு முன்பே 40 கிராமங்களில் 37 கிராமங்களில் சிங்களவர்களே குடியேற்றப்பட்டுவிட்டனர் நாங்கள் 1956க்குப் பின் வந்ததும், மீதமிருந்த 3 கிராமங்களை சட்டவிரோதமாகவும், சட்டத்திற்கு உட்பட்டும் தேவையான நடவடிக்கை எடுத்து. தமிழர்களுக்காகக் காப்பாற்றினேம். 1956 ககு முன் நாங்கள் இருந்திருந்தால் 40 கிராமங்களையும் தமிழர்களுக்காகக் கைப்பற்றியிருப்போம்.''

"தமிழ் மக்களுடைய உரிமைகளுக்காகப் போராடுகின்றவர்கள் என்று சொல்கின்ற தமிழ்க்காங்கிரஸ்காரர்கள், மட்டக்களப்பு, திருக்கோணமலை பறிபோகாமல் தடுத்துநிறுத்த நடவடிக்கை எடுக்கக்கூடாது; வடக்கு வாழ்ந்தால் போதும் திருமலையும் கிழக்கும் எக்கேடு கெட்டாலும் போதும் என்பதுதான் உங்கள் கொள்கையா? தமிழரசுக் கட்சியினர் தான் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

## ஸ்ரீ எதிர்ப்பு போராட்டம்

இதைத் தொடர்ந்து, இந்தியப் பிரஜாவுரிமைச் சட்டத்தைப் பற்றிப் பேசிவிட்டு, "நான் தேர்தலில் நிற்பதற்குக் காரணம் தமிழரசுக் கட்சி என்னை இத்

...பெயர்களும் இங்கே நீக்கப்பட்டுள்ளன.

'நான் ஒருவேளை பொருளாதாரத்தைச் சோதனைகளுக்காகப் புத்தகங்களிலிருந்துபடிக்காமலிருக்கலாம். ஆனுல் நேரடி அனுபவம் இருக்கிறது. புத்தகப்படிப்புமட்டுமிருந்தால் போதாது அனுபவமும்தேவை. எனக்கு அந்த அனுபவம் இருக்கிறது. என்னுடன் போட்டியிடுகிற எவருக்குமே இல்லாத அனுபவம் இத்துறையிலும் ஆட்சிமன்ற நடவடிக்கைகளிலும் எனககு இருக்கிறது.

திரு சிவநேசனின் தலைவரே ஏற்றுக்கொண்டுள்ளபடி இலங்கையின் மிகச் சிறந்த பிரதமரான திரு. டி எஸ் சேனநாயகாவே 7-ம் வகுப்புத்தான் படித்தவர், கருணுநிதிகூட அனுபவத்தைக்கொண்டு, மிகச் சிறந்த முறையில் ஆட்சி நடத்துகிருர்.''

இப்படியாக, புத்தகப் படிப்பு மட்டும் போதாது ஆனுபவம்தான் அதிக முக்கியம் என்பதை அழுத்திப் பேசிவிட்டு அமர்ந்தார் தர்மலிங்கத்தார்.

## சிவநேசன் பதில் அளித்தார்

10 மணிக்கு, மீண்டும் அரை மணித்தியால அவகாசத்தோடு பதில் அளிக்க எழுந்தார் திரு.சிவனேசன். கட்டுப்பாட்டை மீறி, ஆரம்பத்திலேயே கரகோஷம் செய்தனர் அவரது ஆதரவாளர்கள். கூட்டத்தலைவரோ, பொலிசாரே முன்பு கரகோஷம் எழும்பிய போது, கண்டிப்பாக நடந்திருந்தால் பின்னுல் நடந்த அசம்பாவிதங்கள் ஏற்பட்டிருக்காது.

"திரு. தர்மலிங்கம், நான் கிளப்பிய ஒரு விஷயத்துக்கேனும் பதிலளிக்காமல், யாரோ கொடுத்துவிட்ட சர்ட்பிகேட்டுகளை வந்து வாசிக்கிருர். இந்தச் சர்ட்பிகேட்டுகளைப்பற்றி எங்களுக்கு கவலையில்லை'' என்றுசற்று உறைப்பாகவே ஆரம்பித்த போது, மீண்டும் சிலர் கைதட்டினர். இந்தச் சந்தர்ப்பத்தில் தான் தலைவர் குறுக்கிட்டு, 'கைதட்டவேண்டாம்; பொலிசார் அனுமதி மறுத்துவிடுவார்கள்' என்று எச்சரித்தார்.

"அனுபவத்தைப் பற்றிப் பேசினுர். பாராளுமன்றத்தில் ஒருமுறை சட்டையை மடித்துவிட்டுப்பேசி சபாநாயகரிடம் மன்னிப்பு கேட்டிருக்கிருர். இப்படி சபையில் நடந்து கொள்ளத்தெரியாதவர்களை அங்கே அனுப்பிவைப்பது பெரும் வெட்கக்கேடான விஷயம்''

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிரினிடாட் குழப்பங்களை அடக்க வெளி நாட்டு உதவி

## அமெரிக்க கப்பல்கள் விரைகின்றன

டிரினிடாட், ஏப். 23
கெரிபியன் கடல்பிரதேசத்திலுள்ள டிரினிடாட்-டொவாகோ நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்பகரமான நிலைமையைச் சமாளிப்பதற்கு உதவிகள் வழங்குமாறு அமெரிக்கா, பிரிட்டன் போன்ற பல நாடுகளுக்கு அந்த நாட்டின் பிரதம மந்திரி டாக்டர் வில்லியம் அவசரக் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தக் கோரிக்கைகள்பற்றி ஆலோசித்து வருகின்றது. அதேசமயம் அமெரிக்காவின் ஆறு கப்பல்கள் டிரினிடாடை நோக்கிப் புறப்பட்டுள்ளன. இவைகளில் விமானந்தாங்கிக் கப்பலொன்றும் இருக்கின்றது, டிரினிடாட்-டொவாகோவிலுள்ள அமெரிக்கப் பிரஜைகளை அப்புறப்படுத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டால் அதற்கு ஆயத்தமாக இந்தக் கப்பல்கள் அப்பிரதேசத்திலேயே இருந்துவரும் என்று அமெரிக்க அரசாங்கம் அறிவித்திருக்கின்றது.

டிரினிடாட்- டொவாகோவில் சம உரிமைகள்கோரி கறுப்பு இனத்தவர்கள் கலவர ஆர்ப்பாட்டங்களில் இறங்கியுள்ளார்கள். தீயிடுவதிலும், வன்முறைகளிலும் ஈடுபட்ட இவர்களுக்கும் அரசுப்படைகளுக்கு மிடையில் ஏற்பட்ட கலவரங்களில் இதுவரை ஐந்துபேர் பலியாகியிருக்கிறார்கள். நேற்று ராணுவ முகாம் ஒன்றுக்கு கறுப்பு இன ஆர்ப்பாட்டக்காரர்கள் தீயிட்டார்கள். 'கறுப்பர் சக்தி' என்ற இயக்கத்தைச் சேர்ந்த இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அவசரகால சட்டத்தையும் மீறி வன்முறைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிகின்றது. ஊரடங்குச் சட்டமும் அமுல் நடத்தப்பட்டு வருகின்றது

ஆர்ப்பாட்டங்கள் மேலும் மோசமாகலாம் என்று அஞ்சுவதால் இந்த நாட்டின் பிரதம மந்திரி வெளிநாடுகளிலிருந்து உதவிகளை எதிர்பார்க்கிறார் என்று தெரிகின்றது.

## எம். ஜி. ஆர். ரூ. 15 ஆயிரம் நன்கொடை

பம்பாய், ஏப் 23
சினிமாவிலிருந்து ஓய்வு பெறும் நடிகர்களின் பாதுகாப்புக்காக மக்கள் திலகம் எம். ஜி. ராமச்சந்திரன் 15 ஆயிரம் ரூபாய் நன்கொடை வழங்கியிருக்கிறார்.

பிலிம்பேர் பத்திரிகையின் சார்பில் இந்தநிதி ஏற்பாடு செய்யப் பட்டிருக்கின்றது. இப்பத்திரிகையினால் சிறந்த படத்துக்கான வெண்கலச் சிலைப் பரிசை வாங்குவதற்கான எம். ஜி. ஆர். பம்பாய்க்கு வந்திருந்தார். அவரை இந்தி நடிகர்கள் ராஜ்கபூர், பிரான் ஆகியோர் வரவேற்றார்கள். விமானநிலையத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் கூடியிருந்தார்கள்.

ராஜ்கபூர் எம்.ஜி. ஆரைக் கட்டித்தழுவிக்கொண்டார்.

## உற்சவம்

ஊரதிவு, வியா
புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் கோயில் வருடாந்த மகோற்சவம் இம் மாதம் 21ந் திகதி தொடக்கம் நடைபெற்று வருகிறது

இம்மாதம் 28ந் திகதி வேட்டைத் திருவிழாவும், 29ம் திகதி தேர்த்திருவிழாவும் நடைபெறும் தேர்த் திருவிழாவன்று அன்னதானம் வழங்கப்படும்.

30ந்திகதி திருநாவுக்கரசு நாயனார் குருபூசை கொண்டாடப்படவிருக்கின்றது.

## 500 புதிய பஸ்கள்

கோட்டை, வியாழன்
இலங்கை போக்குவரத்து சபை இந்தியாவிலிருந்து 500 ஒற்றைத்தட்டு பஸ்களை இறக்குமதி செய்துள்ளது. தற்போது இவை கொழும்புத்துறை முகத்தில் கப்பலில் இருந்துஇறக்கப்படுகின்றன.

## விவசாயமுகாமில் அம்மைநோய்

விஸ்வமடு, வியா
விஸ்வமடு விவசாயமுகாமில் பெரியம்மை நோய் பரவிவருகின்றதாம் சமீபத்தில் இந்த தொற்று நோயால் பாதிக்கப்பட்ட சுமார் 9 வீரர்கள் அவரவர் வீடுகளுக்கு உடனடியாக அனுப்பிவைக்கப்பட்டனர்.

## உடுப்பிட்டியில் மேதினவிழா

பருத்தித்துறை, வியாழன்
உடுப்பிட்டித் தொகுதியில் நடைபெறவிருக்கும் மேதின விழாவிற் கலந்துகொள்வதற்காக கம்யூனிஸ்ட்கட்சி பிரமுகருள் ஒருவரான திரு. இந்திகா குணவர்த்தன அடுத்த வாரம் வடபகுதிக்கு வரவிருப்பதாகத் தெரிகிறது. திரு. இந்திகா முன்னாள் கைத்தொழில் மீன்பிடி அமைச்சர் பிலிப் குணவர்த்தனவின் மகனாவார். இவருடன் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் திரு: பீற்றர்கெனமனும் கலந்து கொள்வாரெனத் தெரிகிறது.

## 26,648 இளைஞர் ஈடுபடுகின்றனர்

கோட்டை, வியாழன்
தேசிய இளைஞர் சேவை சபையின் தேசிய கிளை ஓர் சேவைத் திட்டத்தின்கீழ் 198 அபிவிருத்தித் திட்டங்கள் தற்போது செயல்படுகின்றன. இத்திட்டங்களில் தினம் சராசரி 26,648 இளைஞர்கள் ஈடுபடுகின்றனர்.

1969-ம் ஆண்டு ஏப்பிரல் 23-ம் திகதி பிரதமர் திரு. டட்லி சேனநாயககாவினால் கேகாலையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்ட இந்த தேசியஇளைஞர்சேவை இயக்கம் தற்போது நாட்டின் 22 மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகிறது,

# இந்திராவுடன் ஒப்பந்தம் எதுவும் செய்யவில்லை

## குறுக்குவிசாரணையில் கிரி தொடர்ந்து சாட்சியம்

புதுடில்லி, ஏப் 23
ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது சம்பந்தமாக தமக்கும் பிரதமர் இந்திராகாந்திக்குமிடையில் ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டிருந்ததாகக் கூறப்பட்டதை திரு. வி. வி. கிரி நேற்று மறுத்தார்.

சுப்ரீம்கோர்ட்டில் ஐந்து நீதிபதிகளுக்கு முன்னால் திரு. கிரிக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கில் அவர் நேற்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டார் தேர்தலில் போட்டியிடுவது சம்பந்தமாக திருமதி இந்திராகாந்தியுடன் ஒப்பந்தம் [illegible] வாளர்களைத் தமக்கு சாதகமாகப் பிரசாரம் செய்ய அனுமதித்ததாகவும் திரு. கிரிமீது குற்றம்சாட்டப்பட்டது.

தேர்தலின்போது லஞ்ச ஊழல்களும் முறைகேடுகளும் இடம்பெற்றதாகவும் திரு. கிரிக்கு எதிராக தேர்தல் ஆட்சேப மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

ஜனாதிபதி தேர்தலின்போது பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியோடும் அவரது ஆதரவாளர்களோடும் தாம் தொடர்புகளை வைத்துக் கொண்டதாகக் [illegible]

## "மொழிப்பிரச்னையைத் தீர்ப்பது மட்டும் கட்சியின் நோக்கமல்ல"

# வடக்கு - கிழக்கில் 1965 தேர்தல்

வடக்குக்கிழக்கு மாகாணங்களிலுள்ள எல்லாத் தொகுதிகளிலும் சென்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்டவர்கள் யார் யார் என்பதும் அவர்கள் பெற்ற வாக்குகள் எவ்வளவு என்பதும் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

## வடக்கு மாகாணம்

### ஊர்காவற்றுறை

| | |
|---|---|
| வி நவரத்தினம் (த க) | 13,558 |
| என். ரி. சிவஞானம் (த கா) | 5;816 |

### வட்டுக்கோட்டை

| | |
|---|---|
| ஏ, அமிர்தலிங்கம் (த க) | 15,498 |
| கே. சுப்பிரமணியம் (த கா) | 4,359 |
| ஏ. தம்பிப்பிள்ளை (சுயேச்சை) | 4.082 |
| ஜே. ஆர். அரியரத்தினம் (சு க) | 1 551 |

### காங்கேசன்துறை

| | |
|---|---|
| எஸ். ஜே. வி, செல்வநாயகம் (த க) | 14735 |
| எஸ், சிறிபாஸ்கரன் (த கா) | 6,611 |
| வி. காராளசிங்கம் (ல ச ச க) | 2,257 |
| கே. வைகுந்தவாசன் (சு க) | 958 |
| எஸ். வி, சீனிவாசகம் (சீனசார்பு க க) | 741 |

### உடுவில்

| | |
|---|---|
| வி. தர்மலிங்கம் (த க) | 11,638 |
| பி நாகலிங்கம் (ல ச ச க) | 6,726 |
| என், சிவநேசன் (த கா) | 5577 |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| ஜி ஜி. பொன்னம்பலம் (த கா) | 9,350 |
| சி. எக்ஸ். மாட்டின் (த க) | 6,800 |
| ஏ. ரி. துரையப்பா (சுயேச்சை) | 5,980 |

### நல்லூர்

| | |
|---|---|
| டாக்டர் இ.எம்.வி. நாகநாதன் (த க) | 10,301 |
| சி, அருளம்பலம் (த கா) | 9,860 |
| ஏ. விஸ்வநாதன் (ல ச ச க) | 2705 |

### கோப்பாய்

| | |
|---|---|
| எஸ். கதிரவேலுப்பிள்ளை (த க) | 12339 |
| ரி. குணரத்தினம் (த கா) | 8,230 |
| எம். துரைராசா (ல ச ச க) | 2,625 |
| எம், பாலசுந்தரம் (சுயேச்சை) | 568 |

### உடுப்பிட்டி

| | |
|---|---|
| எம்.சிவசிதம்பரம் (த கா) | 1,2009 |
| கே ஜெயக்கொடி (த க) | 8,452 |
| ஆர். ஆர், தர்மரத்தினம் (ல. ச ச க) | 5'268 |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| கே. துரைரத்தினம் (த க) | 7,564 |
| என். நடராசா (த கா) | 6,614 |
| கே. மோதிலால்நேரு (சு க) | 2180 |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| வி. என். நவரத்தினம் (த க) | 16,316 |
| எம். சிவநாதன் (த கா) | 7,191 |

### கிளிநொச்சி

| | |
|---|---|
| கா. பொ. இரத்தினம் (த க) | 5,922 |
| வி. குமாரசாமி (த கா) | 4076 |
| வி. ஆனந்தசங்[illegible] (ல ச ச க) | 1804 |
| [illegible]. செல்வநாயக[illegible] (ஈ த ஒ மு) | 831 |
| என். சேதுகாவலர் (சுயேச்சை) | 390 |

# குழப்பத்தில் . . .

(2-ம் பக்கத்தொடர்ச்சி)
இப்படி சிவனேசன் காரசாரமாகப் பேச, கூட்டத்தில் அமைதி குலைந்தது. "தாக்கிப் பேசாதே!" என்று சிலர் கத்தத்தொடங்கினர்.

ஒலிபெருக்கித் தொடர்பு துண்டிக்கப்பட்டது. சிலர் மேடைக்கருகில் ஓடினார். தலைவர் மைக்கை சிவனேசனிடமிருந்து வாங்கிக் கொண்டார். சிவநேசனும் தர்மலிங்கமும் ஏதோ பேசிக் கொண்டனர்.

மீண்டும்ஒருவாறு அமைதி நிலவியது. திரு. சிவநேசன் பேச ஆரம்பித்தார். தனிப்பட்ட முறையில், கட்சியையோ, வேட்பாளரையே தாக்கிப்போசவேண்டாமென தலைவர் கேட்டுக் கொண்டார்.

திரு. தர்மலிங்கத்துக்கு, அந்தநபர் கொடுத்த சர்டிபிகேட்தான் எல்லாக் குழப்பத்தைக்கும் தூண்டுகோலாக இருந்தது 'எனது பிரதம ஏஜண்ட் என்று சொன்னார். அவர் எனது ஏஜண்டாக இருந்ததில்லை. எனக்காகப் பொதுக் கூட்டங்களில் பேசவில்லை என்று சிவநேசன் மறுக்க தர்மலிங்கம் பின்னால் உட்கார்ந்திருந்தபடி ஆனைக்கோட்டையில் பேசவில்லையா என்று குறுக்கிட்டுச் சொல்ல குழப்புகிறார் குழப்புகிறார் என்று சிவநேசன் கூற குழப்பத்திற்கான சூழ்நிலை துரித கெதியில் மீண்டும் உருவாகியது.

ஆனைக்கோட்டையில் ஒரு கூட்டத்திற்கு அவர் தலைமை வகித்தது உண்மை தான் என்று ஏற்றுக் கொண்ட சிவநேசன் உங்களுக்குஅந்த ஒரு நபரை காட்டமுடியுமானால் என்னால் ஆயிரம் தமிழரசுத்தூண்கள் என்னை ஆதரிப்பதைச் சுட்டிக் காட்ட முடியும் என்று சில பெயர்களையும் அவர்களது பதவிகளையும் பகிரங்கமாக சொல்லத் தொடங்கினார் ஒரு இளைப்பாறிய பொலிஸ் இன்ஸ்பெக்டர், ஒரு டாக்டர் ஏழாலையில் ஒருவர் இப்படி பல பெயர்கள் அடிபட ஆரம்பித்தனர்.

மறுபடியும், பார்லிமெண்ட் றூல்ஸ் தெரியாதவர் பாராளுமன்றத்திற்கு அனுப்பப்படுவது வெட்கக்கேடான விஷயம் என்று சொல்ல "என். எம். பெரேராவைக்கூட வெளியில் விட்டார்கள்தான்" என்று தர்மலிங்கம் மறித்துச் செல்ல 'அவர் பேசும் போது நான் குறுக்கிடவில்லை. நான் [illegible]

ஒலிபரப்பு தொடர்பைத் துண்டித்து கூட்டத்தை நிறுத்தும்படி உத்தரவிட்டார். அத்துடன் கூட்டம் முடிந்ததாக அறிவிக்கப்பட்டது திரு. தர்மலிங்கத்தையும், திரு. சிவனேசனையும் ஆதரவாளர்கள் தூக்கிச் சென்றனர்.

## நெல்லியடியில் விஞ்ஞானப் பொருட்காட்சி

பருத்தித்துறை, வியாழன்
வடபகுதி உயிரியல், நீரியல் ஆராய்ச்சிச் சங்கத்தினரால் மேமாதம் 28, 29, 30 ஆகிய மூன்று தினங்களிலும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் ஒரு விஞ்ஞானப் பொருட்காட்சி நடைபெறவிருக்கிறது.

வடபகுதியிலுள்ள உடுப்பிட்டி,பருத்தித்துறை, சாவகச்சேரி, கிளிநொச்சி உட்படப் பல தொகுதிப் பாடசாலைகள் இதில் கலந்துகொள்ளுகின்றன. இதில் வசூலாகும் பணம் தொண்டமானாற்றில் நிறுவப்படவிருக்கும் விஞ்ஞான ஆராய்ச்சி மண்டபநிதிக்கு வழங்கப்பட விருக்கிறது. இதற்கான சகல நடவடிக்கைகளையும் வடமாநில விஞ்ஞானக் கல்வியதிகாரி திரு. எம். அற்புதநாதன் மேற்கொண்டுள்ளார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 24—4—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 பண்ணாரிந்தமிழ், 7-45சித்திரம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதிபதிகளுக்கு முன்னால் திரு கிரிக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கில் அவர் நேற்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டார் தேர்தலில் போட்டியிடுவது சம்பந்தமாக திருமதி இந்திராகாந்தியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதாகவும், திருமதி காந்தியின் ஆதர செய்யப்பட்டிருக்கின்றது.

ஜனாதிபதி தேர்தலின் போது பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியோடும் அவரது ஆதரவாளர்களோடும் தாம் தொடர்புகள் வைத்துக் கொண்டதாகக் கூறப்படுவதில் எதுவித உண்மையுமில்லை என்று திரு. கிரி கோர்ட்டில் கூறினார்.

## "அரசாங்கத்தை ஆதரித்தே உரிமைகளை பெறலாம்"

### மீசாலையில் திரு. குமாரசாமி

கொடிகாமம், வியா

'வடக்கில் பல்கலைக்கழகம் நிறுவவேண்டுமானால்; வடக்குக்கு மகாவலிகங்கை திருப்பப்படவேண்டுமானால்; வடக்கில் தொழிற்சாலைகள் நிறுவி வாலிபர் குறை தீர்க்கவேண்டுமானால் தமிழ் காங்கிரசை ஆதரியுங்கள். அறப்போராட்டம் செய்யவிரும்பினால் சத்தியாக்கிரகம் சட்ட மறுப்புஇயக்கம் நடத்த விரும்பினால் தமிழரசு கட்சியைஆதரியுங்கள். இவ்விரு வழிகளில் எது நல்லவழியென முடிவு செய்யவேண்டியது வாலிபர்களின் பொறுப்பு.

மீசாலையில் நேற்று நடந்த தமிழ்காங்கிரஸ் தேர்தல்மாநாட்டில் சாவகச்சேரி தமிழ் காங்கிரஸ் வேட்பாளர் திரு. வி. குமாரசாமி பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

சாவகச்சேரியிலிருந்து நேற்று மாலை 5 மணிக்கு புறப்பட்ட சைக்கிள் ஊர்வலம். மீசாலை, மந்துவில், வரணி, கொடிகாமம், சங்கத்தானை, டச்சுரோட்டுவழியாக சுமார் 25 மைல் சுற்றிய பின்னர் இரவு 11 மணிக்கு கூட்ட மைதானத்தை வந்தடைந்தது.

இளைப்பாறிய அதிபர் திரு. எஸ். சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் திரு. குமாரசாமி மேலும் கூறியதாவது; ஆட்சிக்குவரும்அரசாங்கத்துடன் சேர்ந்துதான் உரிமைகளை பெறுவதோடு, இப்பகுதிகளையும் அபிவிருத்திசெய்யலாம் என்று நாம் கூறுகின்றோம். அறப்போராட்டம், சத்தியாக்கிரகம் மூலம் தான் உரிமைகளைப்பெறலாம் என்று தமிழரசுக்கட்சியினர் கூறுகின்றனர். எமது வழிதான் சரியா? அல்லது தமிழரசுகட்சியின் வழிதான் சரியானதா? என்பதை தீர்மானிக்கவேண்டியது உங்கள் பொறுப்பாகும்.

திட்டமில்லாத சட்ட மறுப்பு செய்து, பட்டாளத்திடம் அடி, உதைவாங்க தயாரென்றால்! சிங்கள ஸ்ரீ அழித்து சிறைசெல்ல தயா ரென்றால், வாலிபர்கள் தமிழரசை ஆதரிக்கலாம். தமிழ் காங்கிரஸின் வழிதான் சரி என்றால் வாலிபர்கள் எங்களை ஆதரிக்கலாம். இன்றுள்ளநிலையில் எந்த ஒரு வாலிபனாவது சத்தியாக்கிரகம் செய்ய முன்வரமாட்டான் என்பதை கடந்தகால சம்பவங்கள் எடுத்துக்காட்டிவிட்டன இதன் காரணமாகத்தான் வாலிபர்கள் ஒன்றிரண்டு காங்கிரஸ் பக்கம் வந்துள்ளார்கள்.

வழக்கறிஞர் எஸ். பி. மயில்வாகனம்பேசும்போது, 14 வருடங்களாக பாலைவனமாக்கிவிட்ட நமது தொகுதியைச் சோலைவனமாக்க வேண்டுமானால் இம்முறை திரு. குமாரசாமியை ஆதரிக்கவேண்டுமென்று கூறினார்.

திரு. ஆ. கனகரத்தினம், வழக்கறிஞர் வி. பி. கார்த்திகேசு, திரு. ரி. குலேந்திரராசா உட்பட மற்றும் பலர் பேசினார்கள் கூட்டம் அதிகாலை 2மணிக்கு முடிவடைந்தது.

ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகிறது,

...ர் திரு: பீற்றர்கெனமனும் கலந்து கொள்வாரெனத் தெரிகிறது.

## "மொழிப்பிரச்னையைத் தீர்ப்பது மட்டும் கட்சியின் நோக்கமல்ல"

கோப்பாய். வியா

''எமதுகட்சி தமிழ்மொழிப் பிரச்னையை மாத்திரம் தீர்க்கப்பாடுபடவில்லை. இந்நாட்டில் வாழும் விவசாயிகளின் நலனையும் பேணிவருகிறது. இந்நாட்டில் உப உணவுற்பத்தி பெருக்கத்துக்கும் அதன் மூலம் வடபகுதிப் பொருளாதார அபிவிருத்திக்கும் சிறந்த சேவையாற்றியுள்ளோம், இதனை விவசாயப் பெருமக்கள் சிந்திக்கவேண்டும், உபஉணவுப்பொருளான வெண்காயத்தின் உத்தரவாதவிலை உயர்த்தப்பட்டது, விதை உடுளைக்கிழங்கு விவசாயிகளுக்கு கூடுதலான அளவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. விதைவெண்காய இறக்குமதிசெய்ய ஆவன செய்ததுடன் வட பகுதி விளைபொருளான வெண்காயம் தென்பகுதிக்கு அனுப்புவதை அதிகரிக்கச் செய்தது யாவும் எமது கட்சித் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும், நாமும் செய்த சேவையின் பயனாகும்.''

இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் கோப்பாய்வடக்கு வாலிப முன்னணியை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் கோப்பாய் கி. ச. தலைவர் திரு, தி பரமானந்தராஜா கூறினார்.

அடுத்து நடைபெற்ற புதிய நிர்வாக சபைத் தெரிவில், போஷகர்களான திருவாளர்கள் தி. பரமானந்தராசா, ஆ. குமாரசாமி, இ. இராமலிங்கம் உட்பட பதினொருவரும், தலைவராகச் செல்வன் இ. சிவபாலேந்திரன், உபதலைவராக செல்வன் க. மார்க்கண்டு, காரியதரிசியாகச் செல்வன் இ. தனபாலசிங்கம், உபகாரியதரிசியாக மு. சிவபாதம், தனாதிகாரியாக செ. தம்பிமுத்து ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## கல்வி நிலையங்களிலும் இன விகிதப்படிதான் இடம்கொடுப்பார்

### ஆர். ஜி. யின் தேர்தல் கொள்கை

கொழும்பு, வியா

திரு. ஆர். ஜி. சேனநாயக்காவின் சிங்கள மகாஜனக் கட்சி தனது 21 அம்சங்களைக் கொண்ட தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளது. வேலை வாய்ப்பு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள் ஆகியவற்றில் இன விகிதாசாரப்படி இடம்அளிக்கப்படுமெனவும், தேசிய மொழி, பண்பாடு ஆகியன பாதுகாக்கப்பட்டு அரண் செய்யப்படுமெனவும் அவ் விஞ்ஞாபனம் கூறுகிறது. விஞ்ஞாபனத்தில் கண்டுள்ள ஏனைய அம்சங்கள் பின்வருமாறு:-

சிங்கள மொழியின்கீழ் எல்லா இனங்களும் சமூகங்களும் ஒற்றுமைப்படுத்தப்படும்'

வெளிநாட்டார் வர்த்தக நிலையங்கள், வெளிநாட்டாருடைய வங்கிகள், கைத்தொழில்கள், பணம் சேர்க்கும் மற்றைய வெளியார் நிறுவனங்கள் யாவும்தேசியமயமாக்கப்படும்.

முதலாளித்துவத்தின் ஏகபோகத்திலிருந்து மக்களைக் காப்பதற்கு சோஸலிச பொருளாதாரத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

கள்ளக் குடியேற்றத்தைத் தடுக்கவும், மேற்கொண்டும் கள்ளக் குடியேற்றம் நடைபெறுதவகையில் நடவடிக்கைகள் எடுக்கும்முகமாக ராணுவத்தினருக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படும்.

எந்த ஒரு வெளிநாட்டாருக்கும் இந்நாட்டுப் பிரஜா உரிமையை ஆலோசனை இன்றி மனம் பான போக்கில் எந்த அரசாங்கமும் கொடுப்பதைத் தடுக்க அரசியல் அமைப்புச் சட்டத்தில் விதி சேர்க்கப்படும்.

மலைநாட்டில் வாழும் சிங்கள மக்களின் உரிமையைக் காப்பதற்காக இலங்கைப் பிரஜா உரிமை பெற்ற எல்லா இந்தியத் தோட்டத் தொழிலாளர்களும் தனித் தேர்தல்இடாப்பில்வைக்கப் படுவார்கள்.

இலங்கைப் பிரஜைகளல்லாதவர்களுக்குக் கொடுக்கப்பட்டுவரும் வேலைகள், இலவசக்கல்வி, இலவசக் கூப்பன் அரிசி. இலவசவைத்திய சுகாதார வசதிகள், அவர்களுக்கென்றே இருக்கும் தொழிலாளர் கழகங்கள் போன்ற விஷயங்களில் இவர்களுக்கிருந்துவரும் விசேஷ சலுகைகளைத்தடை செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

73 வேட்பாளர்களை 74 தொகுதிகளில் சிங்கள மகாஜனக்கட்சி போட்டியிட நிறுத்தியுள்ளது. திரு. ஆர். ஜி. சேனநாயக்கா தப்பதெனியா, திருகோணமலை ஆகிய இருதொகுதிகளிலும் போட்டியிடவிருக்கிறார்.

| | |
|---|---|
| எம். சிவநாதன் (த கா) | 7,191 |

### கிளிநொச்சி

| | |
|---|---|
| கா. பொ. இரத்தினம் (த க) | 5,922 |
| வி. குமாரசாமி (த கா) | 4076 |
| வி. ஆனந்தசங்கரி (ல ச ச க) | 1804 |
| கே. செல்வநாயகம் (ஈ த ஒ மு) | 831 |
| என். சேதுகாவலர் (சுயேச்சை) | 390 |
| ஆர். வேதநாயகம் (சுயேச்சை) | 130 |

### மன்னார்

| | |
|---|---|
| வி ஏ அழகக்கோன் (த க) | 6896 |
| எம். எஸ். அப்துல் ரஹீம் சுயேச்சை | 6040 |
| எஸ். ஜோன்மாக் (சுயேச்சை) | 4514 |

### வவுனியா

| | |
|---|---|
| ரி. சிவசிதம்பரம் (த கா) | 7265 |
| ஜி. பி வின்சென்ற் (த க) | 4512 |
| சி. சுந்தரலிங்கம் (ஈ த ஒ மு) | 3952 |
| வி. சிறிவர்த்தன (சுயேச்சை) | 872 |
| ஏ. குணசேகரா (சீனச்சார்பு க க) | 744 |
| டபிள்யூ எஸ், பெரேரா (ம ஐ மு) | 436 |
| எஸ். சிறினிவாசன் (சுயேச்சை? | 231 |

## கிழக்கு மாகாணம்

### திருக்கோணமலை

| | |
|---|---|
| எஸ். எம். மாணிக்கராஜா (த. க.) | 9,651 |
| வி. ஆர். நவரத்தினராஜா (ஐ தே க | 5,702 |
| எஸ். எச். சோமபாலா (ல சு க) | 4,555 |

### மூதூர்

| | |
|---|---|
| எம். இ. எச். முகமத்அலி (த க) | 20,237 |
| ஏ. எல். ஏ. மஜீத் (ல சு க) | 16,726 |
| எச். டி. எல். லீலரத்தின (ஐ தே க) | 15,328 |
| டி. வி. போல்ஸ் (ல சு க) | 3,792 |
| ஆர். எம். குணதிலகா (சுயேச்சை) | 376 |
| எஸ். எஸ். ஆறுமுகம் (த கா) | 327 |

### கல்குடா

| | |
|---|---|
| கே. டபிள்யு. தேவநாயகம் (ஐ தே க) | 6,566 |
| பி. மாணிக்கவாசகம் (த க) | 6,098 |
| வி. நல்லையா (த கா) | 3,354 |
| எம். ஏ. சி. எம். ரஹ்மான் (ல சு க) | 981 |
| யு. எச். பாகயா (சுயேச்சை) | 312 |

### மட்டக்களப்பு

| | |
|---|---|
| சி. இராஜதுரை (த க) | 29,023 |
| ஏ. எல். சின்னலெல்பை (ஐ தே க) | 12,010 |
| ஏ. எச். மகான்மரைக்கார் (சுயேச்சை) | 9,915 |
| ஜே. எல். திசவீரசிங்கி (த கா) | 2,107 |
| ஏ. எல். அகமத்லெப்பை (சுயேச்சை) | 4,572 |
| எஸ். நடராஜா (சுயேச்சை) | 8,298 |
| எஸ். விநாயகமணி (க ச) | 833 |

### அம்பாறை

| | |
|---|---|
| எஸ். சோமரத்ன (ல, சு. க,) | 10,077 |
| கே. சுதசிங்கி (ஐ தே க) | 78,57 |
| எம். எஸ். பத்மீவெவா (ம ஐ மு) | 6,524 |

### படிருப்பு

| | |
|---|---|
| எஸ். எம். ராசமாணிக்கம் (த க) | 11,270 |
| எஸ். யு எதிர்மனசிகம் (சுயேச்சை) | 9,140 |
| வி. சின்னதுரை (ஐ தே க) | 1,472 |

### கல்முனை

| | |
|---|---|
| எம். எஸ். காரியப்பர் (சுயேச்சை) | 6,726 |
| எஸ். சற் எம். எம். மௌலானா (த க) | 6,235 |
| எம். சி. அஹமத் (சுயேச்சை) | 5,838 |
| சி. ஏ. காதர் மொஹிதீன் (ஐ தே க) | 275 |

### நிந்தாவூர்

| | |
|---|---|
| எம். எம். முஸ்தபா (ஐ தே க) | 13,789 |
| எம். ஐ. எம். அப்துல் மஜீத் (சுயேச்சை) | 9,400 |

### பொத்துவில்

| | |
|---|---|
| எம். ஏ. அப்துல்-மஜித் (சுயேச்சை) | 6,768 |
| என். தர்மலிங்கம் (சுயேச்சை) | 5,296 |
| எம். வை. முஸ்தபா (சுயேச்சை) | 3,217 |
| யு. எம். சுலைமான் (ஐ தே க) | 2,911 |
| எம். எஸ். காதர் (த க) | 871 |
| பி. ஏ. எல். விஜேவர்த்தன (ம ஐ மு) | 158 |

கேடான விஷயம் என்று சொல்ல ''என். எம். பெரேராவைக்கூட வெளியில் விட்டார்கள்தான்'' என்று தர்மலிங்கம் மறித்துச் செல்ல 'அவர் பேசும் போது நான் குறுக்கிடவில்லை. நான் பேசும் போதுஅவர்குறுக்கிடுகிறார்'' என சொலிவிட்டு டாக்டர் பி. எஸ். சுப்பிரமணியத்தின் சொத்துக்களைப் பற்றிப் பேச முற்பட்ட போது குழப்பம் உச்சகட்டத்தையடைந்தது. மேடையைச் சுற்றிப் பெருங்கூட்டம். பொலிஸ் தடையையும் மீறிகூடி சிவனேசனைப் பேச விடாது தடுக்கும்படி கோஷம் போட்டனர்.

சங்கானைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜயதிலகா

...கானம், 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 மாணவர்மன்றம்.

இரவு6-15 வாத்தியஇசை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 பாட்டு, 7-45 நாடகம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பாட்டு, 10-15 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

## இன்றைய பலன்

சித்திரை மாதம் 11-ம் திகதி [24-4-70]

### சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்-** உறவைக் கெடுப்பதற்குப் பகையாளிகள் வருவர் உற்சாகம் குன்றும். பிரயாணத்தின் போது பொருள்தவறக்கூடும். சிலருக்கு உஷ்ணரோகம் சம்பந்தமான நோய் ஏற்படும்.

**ரிஷிபம்-** தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். களஸ்திரவழியால் பொருள் வரவுக்கு இடமுண்டு. கண்ணியமான நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள். புதிய நண்பர்கள் சேருவார்கள்.

**மிதுனம்-** தாமதகுணத்தின் மூலம் தவறுகள் நடக்கலாம் வேண்டாத விவாதங்களால் வீண்பெயர் கேட்க நேரிடும். கலகச்செய்திக்கும் இடமுண்டு. நிதியில் நெருக்கடியும் தோன்றும்.

**கடகம்-** கனிவான நினைவுகளின் மத்தியில் இன்று வாழ்க்கையை நடத்துவீர்கள் பெரியவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், நிருவாக உத்தியோகத்தர்களில் செல்வாக்கு வளர்பிறையாகும்.

**சிம்மம்-** கடமையில் புதிய ஆர்வம்பிறக்கும் எதையும் சிறப்புடன் செய்வதற்கு விரும்புவீர்கள். ஓவியர்கள் வாழ்க்கை ஒளிமயமாகும். சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம். கலைஞர்களுக்கு நல்லதினம்.

**கன்னி-** இரக்கசிந்தை மேலிடும். பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்க்ள். பெரிய தொடர்புகள் ஏற்படுவதற்கும் இடமுண்டு. சிலர் வேதாந்த விவகாரங்களில் ஈடுபடுவார்கள். கண்ணியமானதினம்.

**துலாம்-** மனதில் விரக்திநிலை தென்படும். உடல் நலமும் பாதிக்கப்படலாம். கால்நடைகளினால் நஷ்டமேற்படும். பூமிப்பிணக்குகளின் மூலம் வழக்குவிவகாரங்களிலும் மாட்டிக்கொள்ளநேரிடலாம்.

**விருட்சிகம்-** அதிக சிந்தனை அமைதியைக் கெடுக்கும். புதியகோணத்திலிருந்து தாக்குதல் உடுவாகும். உம்மிடம் உதவிபெற்றவர்களே இன்று கையை விரிப்பார்கள். விழிப்புடன் இருக்கவும்

**தனுசு-** மேலதிகாரிகளுடன் தொடர்புகொள்வதற்கு இன்று நல்லநாள். இனசனங்கள் மத்தியில் செல்வாக்கு வளரும். குடும்பத்திலும் இன்பமான சூழ்நிலை தென்படும்.

**மகரம்-** உணர்ச்சிமயமான தினம் மனப்போராட்டங்கள் நடைபெறும். உடல்நலமும் பாதிக்கப்படலாம். குடும்பத்தில் ஏற்படும் மோதல்கள் விரக்திமனப்பான்மையை உருவாக்கும்.

**கும்பம்-** விளைபொருள்விருத்தியுடன் விருந்துக்கும் இடமுண்டு. தாய்வழித்தனமும் தாராளமாகக் கிடைக்கும். எதிர்காலவாழ்வுக்கான புதிய திட்டத்தை இன்று உருவாக்குவீர்கள். சிறப்பானதினம்.

**மீனம்-** மற்றவர்களின் இன்னல்கண்டு இரக்கம் காட்டுவீர்கள். தாராளமான குணத்தின் மூலம் தனமும் செலவாகும். புண்ணியாத்திரையுமுண்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

இதுவரை இருந்ததுபோலவே இனியும் இருந்து வரட்டும் என்று நினைத்தால் சுரண்டலும் இம்சையும் தொடர்ந்து நடந்துவரட்டும் என நினைப்பதாக ஆகும், — விநோபாவே,

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "ELLANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் சித்திரை மாதம் 11-ந் திகதி (24-4-70)

# நேர்மையான பொதுத் தேர்தல்

எந்தப் பாராளுமன்றத்துக்கோ, மாநகரசபைக்கோ அல்லது தலத்தயனங்களுக்கோ பிரதிநிதிகளைத் தேர்தல் மூலம் தெரிவு செய்வது ஜனநாயகத்தின் சிறந்த அம்சங்களில் மிக முக்கியமானதாகும், இந்தியாவும் இலங்கையும் அந்நியரது ஆட்சிக்கு உட்பட்டிருக்கையில், நிர்வாக அதிகாரிகள் மூலமே அவர்கள் ஆரம்பத்தில் ஆட்சி செலுத்திவந்தனர். சட்ட நிருபண மன்றங்களிலும் முதலில் அதிகாரிகளும், உத்தியோகப்பற்றற்ற நியமன மெம்பர்களும் மட்டுமே இருந்துவந்தனர்.

இலங்கையிலே 1910-ம் வருடத்தில்தான் சட்டசபைக்கு முதல் முதலாகத் தேர்தல் நடைபெற்றது. பல்லாண்டுகள் கிளர்ச்சி செய்ததன் பயனாக, படித்த இலங்கையர்க்கென்று ஒரே ஒரு ஸ்தானம் சட்டசபையில் தேர்தல் மூலம் ஒதுக்கப்பட்டது. படிப்பும், சொத்துரிமையும் உள்ளவர்கள் மட்டுமே வாக்களிக்கலாம். தேர்தல்மூலம் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய வேண்டுமென்ற கிளர்ச்சியில் தமிழ்மக்கள் முக்கிய பங்கெடுத்தார்கள், தேர்தல் கொள்கையைக் கடைப்பிடிக்கவேண்டுமென்ற அக்கிளர்ச்சியிலே, யாழ்ப்பாண சங்கம் என்ற புகழ்பெற்ற ஸ்தாபனம் அதிகம் ஈடுபட்டது. இக் கிளர்ச்சியிலே தமிழர் முக்கிய பங்கெடுத்தது ஒருபுறமிருக்க, படித்த இலங்கையர் ஸ்தானத்துக்கு பிரபல தமிழரான சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களே முதல் மெம்பராகத் தெரிவுசெய்யப்பட்டார். இதை நினைவுகூருகையில் தமிழருக்கு மகிழ்ச்சியும் பெருமையும் தருவதாகும். பருத்தித்துறையிலிருந்து மாத்தறை வரையிலும், மட்டக்களப்பு முதல் புத்தளம் வரையிலுமுள்ள எல்லா இலங்கை

பாளரைத் தெரிவுசெய்ய வேண்டுமென் பதுபற்றிய விதிகள் தெளிவாகவுள்ளன. சிறப்பாக, சிலவித காரியங்கள் கூடாவென்றும், சட்டவிரோதமென்றும் ஒழுங்கீனமென்றும் தடுக்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் வேற்பாளர்களும், வாக்காளரும் அறிந்து உணர்ந்து, அதன்படி நடந்தாலே தேர்தலும் ஒழுங்காக நடந்து ஜனநாயகமும் வெற்றிபெற முடியும். தேர்தல்சட்ட விதி விவரங்களெல்லாம் அடங்கிய புத்தகம் அரசாங்கத்தால் பிரசுரிக்கப்பெற்றுள்ளது. யாரும் இவற்றைப் படித்துத் தெரிந்துகொள்ளலாம். வேட்பாளருக்கும், வாக்காளருக்கும் வழிகாட்டி, தேர்தல் முறையை நல்லபடி பாதுகாப்பதே இந்த விதிமுறைகள் வகுக்கப்பெற்றுள்ளதின் நோக்கமாகும்.

தேர்தல் சட்ட விதிகளின்படி எல்லாரும் நடந்து, தேர்தலை அமைதியாகவும், நேர்மையாகவும் ஒழுங்காகவும் நடத்தி, பாராளுமன்றத்துக்கு பிரதிநிதிகளை அனுப்பிவைக்க வேண்டுமென்பதை அறிவுறுத்தவேண்டியது நமது கடமையாகின்றது. சிறப்பாக தமிழ்பேசும் மக்கள் மேலான ஒழுங்குமுறைகளையும் நேர்மையான வழியையும் பின்பற்றக்கூடிய பண்புள்ளவர்கள் பொது நன்மைக்கான கடமையுணர்ச்சியும் அரசியல் பண்பும் உள்ளவர்கள். தமிழ் மக்களும் தலைவர்களும் பல அரசியல் கட்சிகளும் இம் முக்கியமானசமயத்திலே தங்கள் கடமைகளையும் பண்பையும் உணர்ந்து வருகிற பொதுத்தேர்தல், மேலானமுறையில் எதிர்காலத்துக்கும் வழிகாட்டும் வகையில் நடக்கும்படியும் நாட்டுக்கும், தமிழ்பேசும் மக்களுக்கும் மதிப்பும் நற்பெயரும் கிடைக்கும்வகையில் நடந்துகொள்வரென்பது நமது நம்பிக்கை

# 'அழுகைக்கும், இரக்கத்திற்கும் வாக்களிக்க வேண்டாம்'

## ஆனைக்கோட்டையில் 'அமிர்'

நல்லூர், வியாழன்

தமிழினத்திற்கு ஓரளவாவது அற்ப சலுகைகளை கொடுக்க முன்வந்த போது அதை தடுத்து நிறுத்திய பெருமை இடதுசாரிகளுக்கே உரியது. இலங்கையில் போட்டியிடும் இடது சாரிகள் மக்களை ஐக்கியப்படுத்தியதாக இதுவரை சரித்திரம் கிடையாது. ஆனால் தொழிலாளர்களின் வாழ்க்கையில் இடையூறையும்தான் இதுவரை செய்து வந்வார்கள்.

ஆனைக்கோட்டையில் நடைபெற்ற தமிழரசு பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் வட்டுக்கோட்டை முன்னாள் எம் பி திரு அ அமிர்தலிங்கம் இங்வாறு கூறினார்.

ஜனநாயக நாட்டிலே இரக்கத்திற்கும், அழுகைக்கும் வாக்களிப்பதல்ல, தமிழினத்தின் உரிமைக்கு போராடிய, போராட முன்வந்திருக்கின்ற எந்தக்கட்சியோ அதையே தமிழ்மக்கள் ஆதரிக்க வேண்டும் என்றும் திரு. அமிர்தலிங்கம் மேலும் சொன்னார். அவர் தொடர் பேசியதாவது;

47ம் ஆண்டுமுதல் 1956ம் ஆண்டுவரை தமிழ்மக்கள் அடி யுதை வாங்காமல் இருந்தார்கள். அதன் பின் எமது கட்சி தமிழ் மக்களுக்கு, தமிழ் அரசியல் வாதிகளுக்கு அடி, உதை பட்டது ஏன்? தமிழினத்தின் உரிமைக்காக போராடியபடியால். இது தமிழரசுக்கட்சியின் தவறு? தமிழினத்தின் உரிமைக்காக போராடியது தவறு?

தமிழினம் எங்கே வாழ்கிறதே அந்த இடமெல்லாம் நாம் ஒற்றுமையாகவும் எமக்கே அந்த பிரதேசம் சொந்தம் என்ற ரீதியிலேயே தமிழரசுக்கட்சி இயங்குகிறது. 1956ம் ஆண்டிற்கு பின் திட்டமிட்ட குடியேற்றத் திட்டத்தை இல்லாமல்செய்தோம். 1956ம் ஆண்டில் கொண்டுவந்த தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்ந்து காலி முகத்திடலிலே செய்த சத்தியாக்கிரகத்தின் பயனாக இன்றும் தனிச்சிங்களத்தை அமுலாக்க முடியாமல் திண்டாடுகிறார்கள். மலையக மக்களின் குடியுரிமை சிங்கள அரசாங்கம் பறிக்க முயன்றபோது அதை எதிர்த்தோம். ஆனால் மலையக மக்களின் சார்பாக எட்டு பிரதிநிதிகள் வந்திருந்தும் அவர்கள் ஒன்றுமே பேசவில்லை. மலையக பிரதிநிதிகள் மலையக மக்கள் மீது துரோகம் செய்தபோதும் நாம் மலையக மக்களையும் எம்முடன் சேர்த்து தமிழினத்தை ஒன்றுபடுத்த வேண்டுமென்ற நோக்குடன் வாதாடினோம். வெற்றிபெற்றோம் அதன் பயன் தான் இன்று விரும்பினால் மட்டுமே இந்தியா செல்லலாம்".

உடுவில் அபேட்சகர் திரு வி தர்மலிங்கம் மா சு குணராசா, பண்டிதர் இராசையா, எம் கே அந்தனிசில் உட்பட பலர் பேசினர்.

0 0 0

## ஆதரவாளர்களின்..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

சென்ற ஜீப்பிற்கு முன்னால் ஆதரவாளர்கள் திரள் திரளாக நின்று கோஷம் எழுப்பினார்கள் மற்றும் தொகுதியிலிருந்து வந்திருந்த தமிழ் ஆதாவாளர்கள் இதில் கலந்துகொண்டார்கள் திரு. மார்ட்டினின் முன்னும் பின்னும் ஆதரவாளர்கள் வந்து கொண்டிருந்தபோது திரு. துரையப்பாவின் ஆதரவாளர்களும் அவரைச்சூழ்ந்து பின்னால்வந்து கொண்டிருந்தனர்.

திரு. துரையப்பா வந்த ஜீப்வண்டியில் யாழ் மாநகர சபை உறுப்பினர்கள் சிலரும் இருந்தனர். அவரது சின்னமான 'குடை' ஒன்றையும் பிடித்துவந்தனர். யாழ்ப்பாணத்தில் போட்டியிடும் மூன்று அபேட்சகர்களும் ஆதரவாளர்களால் உற்சாகமாக வரவேற்கப்பட்டனர். இவர்கள்மூவரும் தங்கள் நியமனப்பத்திரங்களை ஆங்கிலத்தில் தாக்கல் செய்திருந்தனர்.

### சுயாட்சிக்கழக தலைவர்

திரு. துரையப்பாவின் ஊர்வலம் வந்துகொண்டிருந்தபோது, தமிழர் சுயாட்சிக் கழகத்தலைவரும் ஊர்காவற்றுறையில் போட்டியிடுபவருமான திரு. வ. நவரத்தினமும் நல்லூரில் போட்டியிடும், திரு. இரத்தினமும் ஆதரவாளர்களால் அழைத்துவரப்பட்டனர். இவர்கள் நடந்தே சென்றார்கள்.

### நாகநாதன் குமார்

நல்லூரில் தமிழரசு சார்பில் போட்டியிடும் டாக்டர் ஈ. எம். பி. நாகநாதன் நியமனப்பத்திரம் தாக்கல்செய்தபின் வெளியில் வந்ததும் திரு. குமார் பொன்னம்பலத்திற்கு கைக்குலுக்கி ளர்கள் சூழ்ந்து கொண்டு அவரை தோளில் தூக்கிச் சென்றனர் இவருடன் இவரின் பார்ரியாரும் பிள்ளைகளும் வந்திருந்தனர்.

திரு நவரத்தினத்தை தொடர்ந்து உடுப்பிட்டியில் தமிழரசு சார்பில் போட்டியிடும் திரு ஜெயக்கொடி வெளியில்வந்தபோது ஆதரவாளர்கள் அவரை தூக்கிச் சென்றனர்ஊர்காவற்றுறையில் தமிழரசு சார்பில் போட்டியிடும் பண்டிதர் கா பொ இரத்தினத்தை ஆதரவாளர்இடுவர் தங்கள் தோளில் சுமந்து கொண்டு பழையபூங்கா நோக்கிச் சென்றனர் ஆதரவாளர் கோஷயெழுப்பியபடி பின்னால் சென்றனர்

பருத்தித்துறையில் தமிழ் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் திரு என் நடராசா கிளிநொச்சியில் தமிழரசு சார்பில் போட்டியிடும் திரு எம் ஆலாலசுந்தரம் ஆகியோர்கள் வெளியில்வந்தபோது ஆதரவாளர்கள் கோஷமிட்டபடி தூக்கிச் சென்றனர் இதன்பின் கிளிநொச்சியில் சுயேட்சையாகப் போட்டியிடும் திரு ஏ சிவசுந்தரம் வந்தபோது ஆதரவாளர் சுமந்து சென்றனர். திரு துரைத்தினத்தையும் ஆதரவாளர்கள் தூக்கிச் சென்றனர்

உடுப்பிட்டியில் கம்யூனிஸ்ட் கட்சிசார்பில் போட்டியிடும் திரு பொன் குமாரசாமியும் ஆதரவாளர்கள் தூக்கிச் சென்றனர் சிறிது பின்னால் உடுப்பிட்டியில் சமசமாஜக்கட்சி சார்பில் போட்டியிடும். திரு ஆர் ஆர் தர்மரத்தினம் அமைதியாக நடந்து வந்துகொண்டிருந்தார் அருகில் திரு பாலசிங்கமும் திரு ஏ விஸ்வநாதனும் வந்துகொண்டிருந்தனர்.

காங்கேசன்துறையில் கம்யூனிஸ்ட்கட்சி சார்பில்

## வடக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

**வத்தளை**
இல 5
டி ஷெல்டன் ஜயசிங்கா (யூ என் பி)
ஏ டி ஜே லியோ (ஸ்ரீலங்கா சு க)

**நீர்கொழும்பு**
இல 6
டென்சில் பெர்னாண்டோ (யூ என் பி)
ஜஸ்டின் பெர்னாண்டோ (ஸ்ரீ ல சு க)

**கட்டான**
இல் 7
விஜயபாலா மென்டிஸ் (யூ என் பி)
கே ஸி டி சில்வா (ஸ்ரீ ல சு க)
பெர்னாண்டோபுள்ளே (சுயேட்சை)

**திவுலுப்பிட்டியா**
இல: 8
லஷ்மன் ஜயக்கொடி (ஸ்ரீ ல சு க)
ஜே ஏச் ஏ ஜயதிலக (யூ என் பி)
எல் சி எஸ் தக்கொல்ல (சுயேச்சை)

**மீரிகமை**
இல: 9
திருமதி சிவ ஒபயசேகரா (ஸ்ரீ ல சு க)
டபிள்யூ எல் கருணாரத்ன (யூ என் பி)

**கொழும்பு வடக்கு**
இல 1
வி ஏ சுகததாசா [யூ என் பி]
ஐ ஏ பெர்ணண்டோ [சுயேச்சை]
ஹரிஸ் விக்ரமசிங்க [சுயேச்சை]
ஜயரத்ன [சுயே]

**கொழும்பு மத்தி**
இல2 (மூன்றுஉறுப்பினர்)
பலீல் ஏ கபூர் [யூ என் பி]
பீட்டர் கெனமன் [கம்]
பி சரவணமுத்து [சுயே]
பி ஆர் கிருஷ்ணன் [சுயே]
ஆர் பிரேமதாசா [யூ என் பி]
சி துரைராசா [சுயேச்சை]
எம் இஸாக் (ஸ்ரீ ல சு க)

**பொரலலை**
இல 3
ஜனப் எம் எச் முகமது யூ என் பி)
திருமதி குசலா அபயவர்தன [சமசமாஜி]
எம் ஏ மன்சூர் [சுயே]

**கொத்மலை**
இல: 52
டி பி ரணதுங்க [யூ என் பி]
ஒ எம் விஜயவர்த்தன [சுயே]
ஜே டி வீரசேகரா [சு க]

**அலாங்கொடை**

**கம்புறுபிட்டியா**
இல: 67
வி வி ராஜபத்திரா [சுயே[
நாணயக்காரா (கம்யூ)
தர்மபாலா [யூ என் பி]

**கொட்டாவ**
இல 22
எம் டி எச் குணவர்த்தன ]யூ என் பி]
சந்திரா குணசேகரா ]சமமாஜி)

**ஹோமகம**
இல 23
காமினி ஜயசூரியா (யூ என் பி]
டபிள்யு சேனநாயக்கா (சமசமாஜி)
எஸ் மாயாதுன்ன [சுயே]

**தம்புள்ள**
இல 33
ரி பி தென்னக்கோன் [ஸ்ரீ ல சு க]
கே டபிள்யு ஆர் எம் ஏகநாயகா [யூ என் பி]

**லக்கல்ல**
இல 34
பி ஜி முத்துபண்டா [யூ என் பி]
ரம்பண்டா விஜயகோன் ]சுயே]
கே எம் டி பண்டா [சுயே]
எம் சி கோபல்றாவ (ஸ்ரீ ல் சு க)

**மாத்தளை**
இல 35
அலிக் அலுவிஹாரை (யூ என் பி)
ரிச்சர்ட் உடுகம (ஸ்ரீ ல சு க]

**ரத்தோட்டை**
இல 36
எஸ் பி யாலேகம [சு க]
சி முனவீராக [யூ என் பி]

**அக்குறணை**
இல 38
ஏ சி எஸ் ஹமீது (யூ என் பி)
டி ஜி எச் சிரிசேன (சு க[
எம் சி எம் ஹனிபா ]சுயே)
அத்தநாயகா (சுயே)
இலங்கக்கோன் (சுயே)

**கலேகெதர**
இல 39
ஜி டி பண்டா [யூ என் பி[
திருமதி இலங்கரத்ன (சு க)

**கண்டி**
இல 42
ஈ எல் சேனநாயகா [யூ என் பி[
ஜி பி டி சில்வா (சு க)

**செங்கடகல**
இல 43
என் விமலசேன[ யூ என் பி)
ஏ ரத்வத்தை [சு க]
சி வர்த்தன [சுயே[

**குண்டசாலை**
இல 44
ஆர் பி விஜயசிரி (யூ என் பி)
யூ பி வை ஜினதாச (சு க)
எல் குலதுங்க (சுயே)

**அங்ரேன்ஹெட்ட**
இல 48

**பண்டாரகம**
இல 27
டி சி டபிள்யு கன்னங்காரா [யூ என் பி]
பி ஆர் நடரசா [சுயே]
எச் விக்ரமசிங்க [சு க]

**பாணந்துறை**
இல 28
லெஸ்லி குணவர்த்தன ]சமசமாஜி]
சிரில் [யூ என் பி[
ஹெட்டிஆராய்ச்சி [சுயே[

**களுத்துறை**
இல 29
சம்ளி குணவர்த்தன [சுமசமாஜி]
வி எம் விஜயமான்ன [யூ என் பி]

**பேருவளை**
இல 30
பாகீர் மார்க்கார் [யூஎன்பி]
ஐ ஏ அப்துல்காதர் [சு க[
டி எஸ் கல்ஹென்ன ]சுயே]

**மத்துகம**
இல 31
டி ரி பஸ்கோல் [சு க]
விஜயகுணரத்ன ]ம ஐ மு]

**வலப்பன**
இல 47
ரி பி எம் ஹேரத் [சு க]
ஆர் எஸ் ராமநாயகா [யூ என் பி[

**கொத்மலை**
இல 52
டி பி ரணதுங்க ]யூ என் பி)
ஜே டி வீரசேகரா [சு க]
விஜயவர்தன [சுயே]

**முல்கிரிகல**
இல 72
ஜோர்ஜ் ராஜபக்ஸ [சு க[
பிரான்சிஸ்கோ [யூ என் பி]

**கட்டுகம்பொல**
இல 105
ரி பி பி சுபசிங்கா [சு க]
லீலானந்த வீரசுங்க [யூ என் பி]
தர்மதாசா [சுயே]

**குருணாகல**
இல 109
டி பி வெலகெதர [யூ என் பி]
லயனல் [சுயே]

**மதவாச்சி**
இல 113
மைத்திரிபால சேனநாயகா [சு க]
டி எம் ஆரியதாசா (யூ என் பி)
எஸ் அபேசிங்க [சுயே]

**மிகிந்தலை**
இல 115
பி எம் கே தென்னக்கோன் (சு க)
ஏ பி ஆரியதாஸா யூ என் பி)
கந்துல (சுயே)

**கலாவெவ**
இல 116
பி ரட்னமலல்ல (சு க)
ஏ எம் எஸ் அதிகாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதன் அவர்களே முதல் மெம்பராகத் தெரிவுசெய்யப் பட்டார். இதை நினைவு கூருகையில் தமிழருக்கு மகிழ்ச்சியும் பெருமையும் தருவதாகும். பருத்தித்துறையிலிருந்து மாத்தறை வரையிலும். மட்டக்களப்பு முதல் புத்தளம் வரையிலுமுள்ள எல்லா இலங்கை மக்களின் சார்பாகவும் சட்டசபைக்குத் தெரிவுசெய்யப்பட்ட ஒரே ஒருவர் அத் தமிழ்ப்பெருமகனுர் தான்.

அந்த முக்கிய சம்பவத்துக்குப் பின் படிப்படியாக, தேர்தல்கொள்கையை அரசாங்கம் விரிவாக்கிவந்துள்ளது முதலில் இலங்கை அனைத்திலும் கட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை வழங்கப் பட்டது. பிரதேசவாரியாக பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டனர். தமிழ்பேசும் பகுதிகளும் பிரதிநிதிகளை சட்டசபைக்கு அனுப்பிவைத்தன. வடமாகாணமனைத்துக்கும் சேர் டபிள்யூ. துரைசாமி, திரு. பீ. பாலசிங்கம் இவ்விருவரும் மக்களால் தெரிவுசெய்யப் பட்டனர், இப்போது இதே பகுதிகள் 13 மெம்பர்களை பார்லிமெண்டுக்குத் தெரிவு செய்கின்றன. டொனமூர் அரசியல் திட்டமூலம் இலங்கையில் வயதுவந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. இந்த உரிமை முதலில் இலங்கைக்கே கிடைத்தது. பிறகு பல வருடங்கள் கழித்தே இந்தியாவுக்கு கிடைக்கமுடிந்தது. தேர்தல்முறை, இலங்கையில் திருப்திகரமாக நடைபெற்றுவந்துள்ளதென்றே கூறலாம். இவ்விதம் கூறுகையில், தேர்தல் நடத்தும் முறை, வேட்பாளரின் தகுதிகள், தேர்தல் பிரசாரமுறை உள்ளிட்டு பொதுவாகத் தேர்தலே இன்னும் மேலானமுறையில் நடைபெற அதிக இடமுண்டென்பதை நாம் உணராமலில்லை.

ஜனநாயக ஸ்தாபனங்களும், தேர்தல் கொள்கையும் வெற்றிபெற வேண்டுமாயின் அதற்கு முக்கியமான ஒரு நிகந்தனை தேர்தல்கள் ஒழுங்காக நேர்மையாக சுத்தமாக நடைபெற வேண்டியதாகும். அதாவது வேட்பாளர் மட்டுமல்ல, வாக்காளப் பெருமக்களும் தேர்தல் ஒழுங்கின்படி நேர்மையாக நடந்துகொண்டாலே தேர்தலும் சுத்தமாக இருக்க முடியும். தேர்தல் விதிகளெல்லாம் விவரமாக சட்டமூலம் விதிக்கப்பட்டிருக்கின்றன. தேர்தலை எந்தமுறையில் நடத்த வேண்டும், எவ்விதம் வேட்பாளரும் பணிப்பையும் உணர்ந்து வருகிற பொதுத்தேர்தல், மேலானமுறையில் எதிர்காலத்துக்கும் வழிகாட்டும் வகையில் நடக்கும்படியும் நாட்டுக்கும், தமிழ்பேசும் மக்களுக்கும் மதிப்பும் நற்பெயரும் கிடைக்கும்வகையில் நடந்துகொள்வரென்பது நமது நம்பிக்கை.

(8-ம் கலத்தொடர்ச்சி)

## மினுவுாங்கொடை

இல 10
எம் பி டி இஸட் சிரிவர்தன (சு க)
டி டி விஜயதுங்க (யூ என் பி)
குணசேகரா (சுயே)

## கம்பஹா

இல 12
எஸ் டி பண்டாரநாயகா (சுயே)
ஜே ஏ ஜயவர்த்தன யூ என் பி)
பி ஏ பசநாயகா (சு க)

## ஜா-எல

இல 13
பாரிஸ் பெரேரா யூ என் பி)
எஸ் பி சமரசேகரா (சு க)
பீட்டர் மெண்டிஸ் (சுயே)

## மஹர

இல 14
எஸ் கே கே சூரியாராச்சி (சு க)
டியூடர் குணசேகரா (யூ என் பி)

## தொம்பே

இல 15
பீலிக்ஸ் பண்டாரநாயகா (சு க)
டி யூ பெரேரா (யூ என் பி)

## களனியா

இல 16
ஆர் எஸ் பெரேரா (சு க)
ஏ டபிள்யூ ஏ அபயகுணசேகரா (யூ என் பி)
எஸ் டி ஏ சில்வா (சுயே)

## கொலன்னவ

இல 17
ரி பி இலங்கரத்ன (சு க)
திருமதி குசுமா குணவர்தன (யூ என் பி)

## கோட்டே

இல 18
ஸ்ரான்லி திலகரத்ன (சு க)
ஜே நியதிபாலா (யூ என் பி)

## தெஹிவளை-கல்கிசை

இல 19
திருமதி விவியன் குணவர்த்தன (ல ச ச க)
எஸ் டி எஸ் ஜயசிங்கா (யூ என் பி)

சத்தியாக் கிரகத்தின் பயனாக இன்றும் தனிச்சிங்களத்தை அமுலாக்க முடியாமல் திண்டாடுகிருர்கள். மலையக மக்களின் குடியுரிமை சிங்கள அரசாங்கம் பறிக்க முயன்றபோது அதை எதிர்த்தோம். ஆனுல் மலையக மக்களின் சார்பாக எட்டு பிரதி

## காணி வேண்டுமா?

பூநகரி வியா

பூநகரி மன்னார் வீதியிலுள்ள கரியாலு நாகபடுவானில் 100 ஏக்கர் காணி குடியேற்றத் திட்டத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ளது இதற்கான விண்ணப்பங்களை ஏப்பிரல் மாதம்30 ம் திகதிக்கு முன் அனுபிப்வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## வயோதிபரை விரட்டிய யானை

விஸ்வமடு, வியாழன்

நேற்று முன்தினமிரவுவிஸ்வமடு படித்த வாலிபர் குடியேற்றப்பகுதியில் வாழும் ஒரு வயோதிப விவசாயியின் வீட்டுக்கு யானை புகுந்து வயோதிபரைமிரட்டியதாம் யானையைக் கண்டதும் சத்தமிட்டபடியால் அயலவர்கள் தீப்பந்தங்களுடன் வந்து வயோதிபரைக் காப்பாற்றியதாகத் தெரிகிறது.

## பண்ணை மீனுட்சி உற்சவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

பண்ணை ஸ்ரீ மீனுட்சி மகாமாரி அம்மன் ஆலய முதலாவது உற்சவம் வருகிற 28-ம் திகதி நடைபெறவிருக்கிறது. பகல் விசேஷ ஆராதனையும் அன்னதானமும் இடம்பெறும்,

இரவு 'அல்லிஅர்ச்சுன' நாடகமும், கலை, கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெறும்

...குமார்

நல்லூரில் தமிழரசு சார்பில் போட்டியிடும் டாக்டர் ஈ. எம். பி. நாகநாதன் நியமனப்பத்திரம் தாக்கல்செய்தபின் வெளியில் வந்ததும் திரு. குமார் பொன்னம்பலத்திற்கு கைக்குலுக்கி அளவளாவினுர்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் மகனுன திரு. குமார் பொன்னம்பலமும். திரு எஸ் ஜே வி செல்வநாயகத்தின் மகனுன, திரு சந்திரகாசனும், அடிக்கடி வெளியில்வந்து ஆதரவாளர்களுடன் கதைத்துக்கொண்டிருந்தனர். திரு எஸ் ஜே. வி. செல்வநாயகம், நியமனபத்திரம் தாக்கல் செய்தபின்னர், தமது பாரியாருடன் அமைதியாக காரில் சென்றுவிட்டார். ஈழத்தமிழர் விடுதலை முன்னணித் தலைவர் திரு சி சுந்தரலிங்கமும், மாவிட்டபுர ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ சண்முகநாதக் குருக்களுடன் எவ்வித சலசலப்புமின்றிக் காரில் சென்றுவிட்டார்.

சாவகச்சேரியில் தமிழ் காங்கிரசில் போட்டியிடும் திரு வே குமாரசாமியின் ஆதரவாளர்களை இலகுவில் காணக்கூடியதாக இருந்தது அவர்கள் எல்லாரும் கட்சிக் கொடி நிறங்களில் குல்லா அணிந்திருந்தார்கள் திரு குமாரசாமி பழைய கச்சேரி மேல்மாடியில் நின்று வெளியில் எட்டிப்பார்த்த போது ஆதரவாளர்கள் கோஷமிட்டனர் கடமையாற்றிக் கொண்டிருந்த பொலிஸார் அவ்விடத்தை நோக்கி ஓடினுர்கள் பின்னர் திரு குமாரசாமி நியமனபத்திரம் தாக்கல் செய்தபின் வெளியில் வந்தபோது, ஆதரவாளர்கள் அவரை ஜீப்வண்டிக்கு தூக்கிச் சென்றனர் அதன்பின சாவகச்சேரியில் தமிழரசு சார்பில்போட்டியிடும் திரு. வி என் நவரத்தினம், வெளியில் வந்தபோது, ஆதரவா... போட்டியிடும். திரு ஆர் ஆர் தர்மரத்தினம் அமைதியாக நடந்து வந்துகொண்டிருந்தார் அருகில் திரு பாலசிங்கமும் திரு ஏ விஸ்வநாதனும் வந்துகொண்டிருந்தனர்கள்

காங்கேசன்துறையில் சமயூனிஸ்ட்கட்சி சார்பில் போட்டியிடும் திரு வி பொன்னம்பலம் நீளமான சிகப்பு நிறமாலையுடன் நடந்து வந்துகொண்டிருந்தார் அவரை சூழ்ந்து கொண்டு ஆதரவாளர்கள், கோஷமிட்டவண்ணம் வந்து கொண்டிருந்தனர்,

உடுவிலில் சுயேட்சையாசப் போட்டியிடும், திரு சி வி எம் முதலியார் எவ்வித ஆரவாரமுமின்றி ஒருகாரில் சென்று கொண்டிருந்தார் ஆதரவாளர் ஒருவர் அவருக்கு சுருட்டுமாலை ஒன்றை சூட்டினுர் நல்லூரில் சியேட்சையாக போட்டுயிடும் திரு சி தனபானசிங்கம் திரு எஸ் ஸ்ரீநிவாகன் ஆகியோரும் அமைதியாககாரில் சென்று கொண்டிருந்தனர் பருத்தித்துறையில்இலங்கை திராவிடா முன்னேற்றக் கழக ஆதரவில் போட்டியிடும், திரு. ஆ விசாகரத்தினமும் அமைதியாக நின்று கொண்டிருந்தார்

கடைசியாக உடுப்பிட்டியில் தமிழ்க்காங்கிரஸில் போட்டியிடும் திரு எம் சிவசிதம்பரமும், கிளிநொச்சியில் தமிழ்க் காங்கிரஸில் போட்டியிடும் திரு வி ஆனந்தசங்கரியும் வெளியில் வந்தபோது ஆதரவாளர் கோஷமிட்டபடி இருவரையும் தூக்கிச் சென்ருர்கள்

வை எம் சி ஏக்கு முன்னுல் சகல கட்சி ஆதரவாளர்களும், கலந்துரையாடிக்கொண்டிருந்தார்கள் எவ்வித அசம்பாவிதங்களும் ஏற்படாதபடி பொலிசார் காலையிலிருந்து கச்சேரி பகுதியில் கடமையாற்றினுர்கள். பாதுகாப்பு ஏற்பாடுகளை வடபகுதி பொலிஸ் அதிபர் திரு ஆர் சுந்தரலிங்கம் நேரடியாகக் கண்காணித்து வந்தார்

## பாலைதீவு படகு விபத்து ...

[ 1 பக்கத் தொடர்ச்சி ]

| | |
|---|---|
| திரு க சுந்தரம்பிள்ளை, 'விமலாசனம்', | 5-00 |
| மயிலிட்டி தெற்கு | 5-00 |
| திரு சி நாகலிங்கம், ஆசிரியர், கட்டுவன் | |
| திரு த திருஅருட் செல்வன், 'குகபதி' வர்த்தலைவிளான் | 5-00 |
| திரு செ சிவலிங்கம், 'ஷெவல்', வர்த்தலைவிளான் | 5-00 |
| செல்வி சு சுமணவதி, வர்த்தலைவிளான் | 5-00 |
| திரு க சுந்தரலிங்கம், 'தவவாசா', வர்த்தலைவிளான் | 5-00 |
| திரு த து ஜெகன்நாதன், மயிலிட்டி தெற்கு | 5-00 |
| திரு சி கணேசலிங்கம், கட்டுவன் | 5-00 |
| பண்டிதர் வே முத்துலிங்கம், கட்டுவன் | 5-00 |
| திரு நா குலசிங்கம், கட்டுவன் | 2-00 |
| திரு மு திருநாவுக்கரசு. குரும்பசிட்டி | 2-00 |
| திரு சி கனகசபை, 'லக்ஸ் லோன்றி' கட்டுவன் | 2-00 |
| திரு பொ பாலநாதன், ஆசிரியர், கட்டுவன் | 2-00 |
| செல்வன் நா. சண்முகலிங்கம், நகுலகிரி | 2-00 |

## தமிழில் பிழை

கோடடை, வியாழன்

கூ. மொ. விற்பனை நிலையங்களில் தமிழ் புறககணிககப்படுவதாக புகார் கூறப்படுகிறது. விற்பனைநிலையங்களில் விநியோகிககப்படும் பொருட்களில் 'பொருட்களுக்கு'' என்ற தமிழ்ப்பதம் ''பெருட்களுக்கு'' என்று எழுதப் படடுளளதாம். இதுபற்றி ஆவன செய்யுமாறு இலங்கைத் தமிழணிச்சபை கூ. மொ. வி. தலைவரிடம் கடிதமூலம்கேடடுககொணடுளளது.

...தமல்
இல:52
டி பி ரணதுங்க[யூ என் பி]
ஓ எம் விஜயவர்த்தன [சுயே]
ஜே டி வீரசேகரா [சு க]

## அம்பலாங்கொடை

இற: 56
டாக்டர் எம் எச் சத்தசேன [யூ என் பி]
எல் சி டி சில்வா(சமசமாஜி
யூ பி குலசிங்க [சுயே]

## பெந்தர எல்பிட்டிய

இல:57
அல்பர்ட் காரியவாசம் (சு க)
லூபா கருணுதிலகா (யூ என் பி)

## ஹினிதும

இல: 58
எம் எஸ் அபரகிரி [யூ என் பி]
எச் திசநாயகா [சு க]
எதிரிசிங்க [சுயே]

## பத்தேகம

இல: 59
நீல் த அல்விஸ்[சமசமாஜி]
ஈ டி விக்கிரமதிலகா [யூ என் பி]

## ரத்கம

இல: 60
டி ஈ திலகரத்ன[யூ என் பி]
எம் ஜி மெண்டிஸ் [கம்]
ஏச் கொடகே [சுயே]
ராஜபக்ஸ [சுயே]

## ஹக்மீயண

இல 61
ஏ டி எஸ் டி சில்வா [யூ என் பி]
எஸ் சமரசேகரா [சு க]
குலதுங்கா [சுயே]
சுகததாசா [சுயே]

## காலி

இல:62
டாக்டர் தகநாயகா [யூ என் பி]
டபிள்யு எஸ் அபயகுணவர்த்தன [சு க]
குணசேகரா [சுயே]

## ஹபரதுவ

இல:63
பிரின்ஸ் குணசேகரா[சு க]
ஜிபி எஸ் டி சில்வா [யூ என் பி]
ஆ விமலரத்ன [சுயே]

## வெலிகம

இல: 64
எஸ் எஸ் பெரேரா [யூ என் பி]
பாடீ இலங்கக்கோன் [சு க]

## அகுரஸ்ஸ

இல: 65
டாக்டர் விக்கிரமசிங்கா [கம்]
வி பி ஏ அபயசிங்கா [யூ என் பி]

## தெனியாய

இல:66
டபிள்யு டி சுமணபாலா [சு க]
சார்லி அன்னங்கரா [யூ என் பி]

## குண்டசாலை

இல 44
ஆர் பி விஜயசிரி (யூ என் பி)
யூ பி வை ஜினதாச (சு க)
எல் குலதுங்க (சுயே)

## அங்ரேன்மஹேட்ட

இல 48
ஜி அபயகுணசேகரா [யூ என் பி]
டி பி உனன்தென்ன [சு க]

## புத்தளம்

இல: 96
நைனுமரிக்கார்[யூ என் பி]
ஏ கே எஸ் மரிக்கார்[சு க]
ஒகஸ்டின் [சுயே]
சின்னப்பா [சுயே]

## சிலாபம்

இல: 102
ஷர்லிகொரியா[யூ என் பி]
எஸ் டி ஆர் ஜயவர்த்தன (சு க)

## நாத்தாண்டியா

இல: 103
ஹியூ பெர்னுண்டோ [யூ என் பி]
பி திசேரா ]சு க]
ஜோர்ஜ் பெர்னுண்டோ [சுயே]

## வென்னப்புவ

இல:104
வெஸ்டஸ் பெரேரா [யூ என் பி]
ஏ பொன்சேகா (சு க]

## குளியாபிட்டிய

இல 106
இரியகொம்லே [யூ என் பி]
ஜி டபிள்யு சமரசிங்கா [சு க]

## பிபிலே

ஆர் எம் டி பண்டா [யூ என் பி]
எம் ஏ ஜயசிங்சு... ]சி க]

## கலிகமுவ

இல 131
திருந்தி விமலா கன்னங்கரா [யூ என் பி[
பி ஆர் நவரட்னே [சுயே]
பி பி பாலசூரியா [சு க]

## மாவனல்ல

இல 134
சி ஆர் பெலிகமன]யூஎன்பி]
பி ஆர் ரட்னுயகா [சு க]
பண்டார [சுயே]

## நாவலப்பிட்டி

இல 51
சந்திரா கருணரத்ன [யூ என் பி]
அலுத்தகமகே [சு க]
மொகிதீன்காதர் ;சுயே]

## கேகாலை

இல 132
பி பி ஜி கலுகல்லை ]சு க]
எஸ் என் செனிவிரத்ன [யூ என் பி]
அத்துருபாண [சுயே]

## கொலன்னே

இல 145
நந்தா மத்தியூ [யூ என் பி]
விமலாநாகா [சமசமாஜி]
வணிகதிலகா [சுயே[

ஏ பி ஆரியதாஸ யூ என் பி)
கந்துல (சுயே)

## கலாவெவ

இல 116
பி ரட்னமலல்ல (சு க)
ஏ எம் எஸ் அதிகாரி (யூ என் பி)

## மின்னேரியா

சி பி டி சில்வா(யூ என் பி)
ரட்னதேசப்பிரிய சேனநாயகா (சு க)

## மகியங்கன

சி பி ஜே செனிவிரத்ன (யூ என் பி)
ஆர் எம் ஜி ரட்னுயகா (சு க)
டி டி விக்ரமரட்ண (சுயே)

## சொர்னதோட்ட

இல 124
விஜயரத்ன பண்டா(சு க)
ஆர் எம் அபயக்கோன் (யூ என் பி)
எஸ் பி ஏகநாயகா (சுயே)

## ஊவா பரணகமுவ

இல 125
டி எம் அப்புகாமி (சுயே)
கருணரத்ன (யூ என் பி)
ஜோதிரத்ன (சுயே)
டிம்புலான (சுயே)
டெலுங்கஹாவத்த (சு க)
சமரநாயகா (சுயே)

## பண்டாரவளை

இல 127
ஆர் எம் அப்புகாமி (சு க)
ஆர் எம் அப்புகாமி (யூ என் பி)
குணசேகரா [சுயே]

## ஹப்புத்தலை

இல 128
மொண்டேகு ஜயவிக்கிம [யூ என் பி]
பி ஜி ஆரியதாஸ [சு க]

## பலாங்கொடை

இல 141
திருமதி சீதா செனிவிரத்ன [யூ என் பி]
திருமதி மல்லிகா ரத்வத்தை ]சு க]
டெல்கொட [சுயே]
எஸ் சின்னத்தம்பி [சுயே]

## கலாவன

இல 144
ஏ பிலப்பிட்டிய [யூ என் பி]
சரத் முத்துவேட்டுகம [கம்யூ]
திருமதி சோமா மத்தியூஸ் [சுயே]

## ஹேவாஹெட்ட

இல 49
எம் ஏ டி அப்புகாமி [யூ என் பி]
பி தென்னக்கோன [சு க]

## கம்பளை

இல 50
எல் பி திசாநாயகா [யூ என் பி]
டி எம் ஜயரத்ன [சு க]
டி வணிகசேகரா [சுயே ]

[2-ம் கலம் பார்க்க]

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org